# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 34

03.09 2023




பொருளாதார நெருக்கடியில் “பிரிக்ஸ்”எதனைச் சாதிக்கும்? 09

ஒரு தொழிலின் தொடக்க புள்ளியே நம்பிக்கை தான்... 12

சந்தனமர வளர்ப்பு முறை 16

## சந்திரயான் 3 வெற்றியும் இலங்கை - உலகப் பொருளாதாரத் தாக்கமும்

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# பதவி உயர்வே இல்லையா? பிரச்சினை உங்களிடம்தான்!



அலுவலகத்தில் பணியாற்றும் எல்லோருமே பதவி உயர்வைத் தங்கள் வேலைக்குக் கிடைத்த அங்கீகாரமாக நினைக்கிறார்கள். அந்தப் பதவி உயர்வைப் பெற நாம் எவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என அறிந்து வைத்திருக்கிறோம். ஆனால், எவற்றையெல்லாம் செய்யக் கூடாது என்பது பலருக்கும் தெரிவதில்லை. அமெரிக்காவைச் சேர்ந்த எமிலி கும்லர் எழுதிய 'ஹௌ நாட் டு கெட் புறொமோட்ட்' (How Not to Get Promoted) என்கிற புத்தகம் அது குறித்து விரிவாகச் சொல்கிறது.

"பதவி உயர்வு என்பது ஒரு விசித்திரமான விஷயம். 'எல்லாம் எனக்குத் தெரியும்' என்கிற ஈகோவில் இருக்கும் பணியாளரும் தோற்றுப்போகிறார். எல்லாம் இருந்தும் என்னிடம் இதற்கான தகுதி இருக்கிறதா என்று சந்தேகப்படும் பணியாளரும் தோற்றுப்போகிறார். அவர்களின் தோல்வி குறித்து ஒருவர் எரிச்சலுடனும், மற்றொருவர் புலம்பலுடனும் நிறுவனத்தில் செயல்படுகின்றனர்.

'இதில் உன்னுடைய தப்பு ஒன்றும் இல்லை அவர்களுக்கு உன்னைப் பிடிக்கவில்லை…', 'ஒருத்தரும் உன்னை மதிப்பதில்லை நீ ஏன் மற்றவர்களை மதிக்க வேண்டும்…', 'உன்னுடைய ஐடியாக்கள் எப்போதுமே சிறப்பாக இருந்ததில்லை அதனால்தான் யாராவது ஒருவர் கிரெடிட்டை எடுத்துக்கொள்கிறார்கள்…', 'நீ இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறாயே! இந்த அலுவலகத்தில் இது யாருக்காவது தெரியுதா..?', 'ஐந்து மணிக்கு முடியும் இந்த அலுவலகத்தில் நீ மட்டும் ஏனப்பா அன்றாடம் இரவு வரை உட்கார்ந்து வேலை செய்கிறாய்..?', 'அவன்தான் குழப்பத்தை உண்டு பண்ணுகிறான் என்று யாருக்குமே ஏன் தெரிய மாட்டேன் என்கிறது..?'

இவற்றில் ஒன்றோ, அதற்கு மேற்பட்ட கேள்விகளோ உங்களிடம் அடிக்கடி கேட்கப்படும் ஒன்றாக இருந்தால், நீங்கள் கொஞ்சம் உங்களை உற்று நோக்கிச் சரி செய்துகொள்ள வேண்டும். நீங்கள் ஒரு புதிய பணியாளராக இருந்தாலும் சரி, சிரேஷ்ட முகாமையாளராக இருந்தாலும் சரி, இதைச் செய்தே ஆக வேண்டும்!

அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி நிறுவனத்தின் இலக்குகளை எட்ட உதவவேண்டும்என்பதுதான் அனைவரின்



எண்ணமுமே. பணியிடத்தில் பொறுப்புகளை எடுத்துக்கொண்டு நேர்த்தியான பங்களிப்பை அளிப்பதன் மூலமே மேலதிகாரிகளின் மனதில் இடம்பிடித்து, அவருடைய மூளையில் உங்களுக்கான மதிப்பெண்களை ஸ்கோர் செய்து முகாமையாளரிடம் நல்ல பெயர் வாங்க முடியும். நம்முடைய வேலை குறித்து நமக்கு சொல்லப்படும் பின்னூட்டங்களை ஏற்றுக்கொண்டு அதற்கேற்பச் செயல்படுவதுதான் சிறப்பான செயல்பாடாக இருக்கும்.

ஆனாலும், நம்மில் பெரும்பாலானோருக்கு இந்தச் சிஸ்டத்தில் செயல்படுவது கொஞ்சம் கடினமான ஒன்றாகவே இருக்கும். அடுத்தவர்களைக் குறை சொல்வது, தன்னார்வத்துடன் பங்களிக்காமல் இருப்பது, புகார் சொல்வது மற்றும் முதுகில் குத்துவது போன்றவை எல்லாம் பதவி உயர்வு பெறும் வழிமுறையே அல்ல" என்ற உண்மையை நச்சென்று சொல்கிறார் ஆசிரியர்.

### யாருக்குப் பதவி உயர்வு?

"உதாரண புருஷர்களாகத் திகழக்கூடிய பண்பு இருக்கும் மனிதர்களுக்கே பதவி உயர்வு என்கிற கொள்கையில் நிர்வாகத்தினர் தெளிவாக இருக்கின்றனர். ஆனால், 'வேலை வாங்குகிற வரை நன்றாக வாங்கிவிட்டுப் பதவி உயர்வு என்று வரும்போது நம்மை ஒதுக்கி விட்டார்கள். இராப்பகலாக எப்படியெல்லாம் உழைத்தேன் அதை எல்லாம் ஈஸியாக மறந்துவிட்டார்களே...' என்கிற ரீதியில் சிலர் பேசுவதைப் பார்க்கிறோம்.

இப்படி நமக்கு நடக்கும்போது அலுவலகத்துக்கு எதிரான ஒரு போராளியாக மாறிவிடுகிறோம். பதவி உயர்வு தர மறுத்தவர் பகையாளி ஆகிவிடுகிறார். நம் வாயில் இருந்து தெறிக்கும் வார்த்தைகள் நம் மனக்காயத்தை ஆறவைக்கும் மந்திரமாக ஆகிவிடுகிறது. கொஞ்சம் கொஞ்சமாக நாம் அனைவரையும் குறை சொல்ல ஆரம்பித்துத் தவறான நடத்தை கொண்டவராக ஆகிவிடுகிறோம். பெரும்பாலான சமயம், நம்முடைய பாதுகாப்பற்ற உணர்வு நம்முடைய தவறான நடத்தையை வேகப்படுத்தி வழிநடத்திச் செல்வதாக அமைந்துவிடுகிறது.

பதவி உயர்வு என்பதைப் பொறுத்தவரை, உங்களுடைய வெற்றிக்கு உங்களைவிட அதிக அளவில் தடைபோடும் நபர் வேறு யாரும் இல்லை. நீங்கள் உங்களைப் பற்றி எந்தளவுக்கு வேண்டுமென்றாலும் உயர்வாக நினைத்துக் கொண்டு எல்லா செக் பாக்ஸிலும் டிக் அடித்துக் கொள்ளலாம். மதிப்பெண்களை அள்ளி வழங்கிக்கொள்ளலாம். ஆனால், பதவி உயர்வு தருபவர்களும் உங்களுக்கு அதே அளவு மதிப்பெண்களைத் தர வேண்டும்.

அப்படித் தராவிட்டால் என்னவாகும்? கோபம், எரிச்சல் மற்றும் ஏக்கம் என்பவையே நம்மிடம் மிஞ்சும். இந்த நிலையை அடையாமல் இருக்க உங்களை நீங்கள் சரியாக எடை போட்டுக்கொண்டே பதவி உயர்வுக்கு முயற்சி செய்ய வேண்டும்.

இது ஒரு புறம் எனில், எல்லாவற்றுக்கும் தகுதியானவராக நீங்கள் இருந்தும் உங்களைப் பற்றி நீங்களே குறைத்து எடை போட்டுக் கொண்டீர்கள் எனில், நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக காலம் ஒரே பதவியில் நிலைத்திருக்க வேண்டியிருக்கும். எனவே, சரியான அளவில் உங்களை நீங்களே எடைபோட்டுக்கொள்வது தான் பதவி உயர்வுக்கு அவசியமான ஒன்றாகும்.

இதில் இன்னுமொரு சிக்கல் இருக்கிறது. பதவி உயர்வு என்பது ஒரு சுயநலமான விஷயம். 'நான்தான் முக்கியம். என் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். பதவி உயர்வு பெற எனக்கு மட்டுமே தகுதியிருக்கிறது. நான்தான் முன்னணியில் இருக்க வேண்டும். நான், நான், நான்...' என எப்போதும் உங்களைப் பற்றி மட்டுமே நினைக்க வைக்கிற ஒரு விஷயம் இது. இந்த மாயவலையில் நீங்கள் வீழ்ந்து விட்டால் உங்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பது கடினம்தான். ஏனென்றால், உங்களுக்குப் போட்டியாகப் பல நபர்கள் இருக்கவே செய்கின்றனர். அவர்களுடைய திறமை, தகுதி, குணம் என்பவை குறித்துச் சற்றும் சிந்திக்காமல் உங்களைப் பற்றி மட்டுமே நீங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தால், உங்களுக்குப் பதவி உயர்வு என்பது கிடைக்கவே கிடைக்காது.

ஏனென்றால், உங்களிடம் இல்லாத குணம் ஒன்று, பதவி உயர்வு பெறுபவரிடம் இருக்கிறது. அதனால்தான் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது. எனவே, உங்களைப் பற்றி மட்டுமே சிந்திக்காமல் மற்றவர்களைப் பற்றியும் அவசியம் சிந்திக்க வேண்டும்" என்கிறார் ஆசிரியர்.

"நீங்கள் நல்லதொரு டீம் பிளேயர் நன்கு நிர்வாகம் செய்வதாக நினைத்துச் செயல்படுபவர். உங்கள் குழுவே உங்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கும். ஏன் தெரியுமா? குழுவின் தலைவராக குழுவில் உள்ள வேலைகளை எல்லாம் நீங்கள் இழுத்துப்போட்டுச் செய்து கொண்டிருப்பீர்கள்.

இந்தவிதச் செயல்பாடு தவறு என்றாலும் நீங்கள் தற்போது இருக்கும் பதவிக்கு அது சரியான செயல்பாடாகக்கூட இருக்கலாம். உங்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தால்

(06ஆம் பக்கம் பார்க்க)

**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0764438620

## வாழ்க்கைச் சுமை!

மக்களுடைய வாழ்க்கைச் சுமை தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கம் அதனையிட்டு எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் தமது அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதிலேயே அக்கறையாக இருப்பதாக கத்தோலிக்க ஆயர்கள் பேரவை குற்றஞ்சாட்டியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கியுள்ளது என்பதைக் காரணமாகக் காட்டி இந்த நிலை தொடர்வதை அனுமதிக்க முடியாது எனவும் ஆயர்கள் பேரவை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

நாட்டின் தற்போதைய நிலையைக் கையாள்வதற்கு பலமான அரசாங்கம் ஒன்று இல்லாத நிலையில், மக்கள் நம்பிக்கையை பெருமளவுக்கு இழந்து வருகின்றார்கள். அரசாங்க நிதியைச் சேமிப்பதற்காக வழங்கப்பட்ட ஐந்து வருட ம்பளமற்ற விடுமுறை என்பது பாதகமான விளைவுகளைத்தான் ஏற்படுத்திவருகின்றது. பெருந்தொகையான மருத்துவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக் கழக பேராசிரியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் நாட்டில் புத்திஜீவிகள் இல்லாத நிலை உருவாகியுள்ளது.

மருத்துவத்துறையை இது மிகவும் மோசமாகப் பாதித்திருக்கின்றது. இந்த நிலைமையைச் சீரமைத்து மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் மருத்துவ சேவையை வழங்குவதற்கான திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடியும், அதிகரித்தர வரி விதிப்பும்தான் புத்திஜீவிகள் பெருமளவுக்கு நாட்டைவிட்டு வெளியேறுவதற்குக் காரணம். அதாவது, நாட்டில் தொடர்ந்தும் இருந்து சேவையாற்றுவதற்கான நம்பிக்கையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது.

இரண்டாவது உலகப் போரின் பின்னர் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை ஜப்பான் எதிர்கொண்டது. அதேபோல சிங்கப்பூரும் இதேபோன்ற ஒரு பொருளாதார மந்த நிலையில் தான் இருந்தது. இந்த இரண்டு நாடுகளும் பொருளாதாரத்தில் எவ்வாறு முன்னேறின, அந்த நாடுகளின் அரசாங்கங்கள் மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கையைக் கொடுத்து மக்களைப் பொருளாதாரத்தை வளர்க்கும் சக்திகளாகப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட்டன. மக்களும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் தமக்குள்ள பொறுப்புணர்வை புரிந்துகொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் தவறான பொருளாதாரக் கொள்ளை, ஊழல்கள், மோசடிகள், மக்களுக்கு நம்பிக்கையளித்து அவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இல்லாத நிலை என்பன கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. பொருளாதாரத்தை முன்னேற்றுவதைவிட, மீண்டும் கடன்களைப் பெற்று கடன்களை அடைப்பதில்தான் அக்கறை காட்டப்படுகின்றது. அரசியலுக்கு அப்பால் சென்று மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டால் மட்டும்தான் நிரந்தரமான மீட்சி கிடைக்கும் என்பதுதான் ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளிடமிருந்து நாம் கற்க வேண்டிய பாடங்கள்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



## ஓலைப்புட்டு உணவகங்கள்

தமிழகத்தில அகதிகளாகச் சென்றுள்ள எம்மபவர்கள் அங்கு ஆரம்பித்துள்ள ஒலைப்புட்டு உணவகங்கள் குறித்த உங்களுடைய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. ஈழத் தமிழர்களின் உணவு வகைகள் வித்தியாசமானவை. சுவை மிக்கவை. தமிழக மக்களால் விரும்பி உண்ணப்படக் கூடியவை. அந்த வகையில் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த உணவகங்களுக்கு கனிமொழி விஜயம் செய்து தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும் அதனை ஆரம்பியுங்கள் என அழைப்பு விடுத்திருப்பது அந்த உணவகத்துக்குக் கிடைத்திருக்கும் ஒரு அங்கீகாரமாகவே பார்க்கப்பட வேண்டும். இது போன்ற அரிய கட்டுரைகளைத் தரும் தமிழர் பொருண்மியத்துக்கும் வாழ்த்துகள்.

**செம்பணற்செல்வி, யாழ்ப்பாணம்**

●●●

## பணக்காரர்களின் பழக்கங்கள்

பணக்காரர்கள் பின்பற்றும் பத்து பழக்கங்கள் என்ற தலைப்பில் தமிழர் பொருண்மினம் கடந்த வாரம் வெளியிட்டிருந்த கட்டுரை மிகவும் பயனுள்ளதாகவும், எம்மைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்திருந்தது. பணத்தை உழைப்பதைவிட அதனை செலவிடுவதில் - அதனைச் சேமிப்பதில் எந்தளவுக்குக் கவனத்துடன் இருக்க வேண்டும் என்பதை இந்தக் கட்டுரை வெளிப்படுத்தியது. சாதாரண வாசகர்கள் இது போன்ற கட்டுரைகளை வாசிப்பதன் மூலமாக தங்களுடை நிதிப் பழக்கங்களை நன்கு திட்டமிடவும் செப்பனிடவும் முடிகின்றது. இது போன்ற கட்டுரைகளை தமிழர் பொருண்மியம் தொடர்ந்தும் வெளியிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மயில்வாகனம்.எம்., அரியாலை**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-----------------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------------------
**முகவரி** - ----------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - --------------------------------------
**சந்தாக் காலம்** - ---------------------------------------------
**செலுத்திய தொகை** - ---------------------------------------
**செலுத்திய திகதி** - -----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,62,900 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,77,650 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** பெரும்போக நெற்செய்கையை அக்ரோபரில் ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாமே?

**துசித்தா தங்கவேல்**
**கிளிநொச்சி**

**பதில் -** உண்மைதான். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி அல்லது அதனை



அண்மித்த காலப்பகுதியில் பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளதாக செய்தி வந்திருக்கின்றது.

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை திட்டமிடுவது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக விவசாய அமைச்சு குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய எல் நினோ நிலைமை காரணமாக, எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், மழைக் காலத்துக்கு பின்னர் மீண்டும் வறட்சியான காலநிலை ஏற்படக் கூடும் என்பதால், மழை நீரை விரயமாக்காமல் உரிய முறையில் நீரை முகாமைத்துவம் செய்ய வேண்டுமென விவசாய அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

தற்போதைய கடும் வரட்சியால் பாதிப்பை எதிர்கொண்டுள்ள கமக்காரர்கள் எதிர்காலத்தில் நீரைச் சேமித்து வைத்துப் பயன்படுத்துவதற்கான பொறிமுறைகளைக் கையாள்வது அவசியம். குறிப்பாக வன்னி பெருநிலப்பரப்பில் தூர்ந்து போயுள்ள குளங்களைப் புனரமைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

**கேள்வி -** தரமான மருந்துகள் கிடைக்காமல் நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டமைக்கு பொருளாதார நெருக்கடி ஒரு காரணமா?

**மதியழகன்**
**துன்னாலை.**

**பதில் -** அவ்வாறு சொல்லப்பட்டாலும், மக்களுடைய மருத்துவப் பிரச்சினைகளில் இந்தளவுக்கு அசட்டையாக அரசாங்கம் இருந்திருக்கக்கூடாது.

கடுமையான விமர்சனங்களையடுத்து தரமான மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஐந்து பேர்அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

திறைசேரியின் பிரதிச்செயலாளர் ஏ.கே சேனவிரத்ன தலைமையில், இந்தக் குழு சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்து தரமான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளை முன்னெடுப்பது இந்தக் குழுவின் பொறுப்பாகும்.

செப்ரெம்பர் 6ஆம் திகதிக்கு முன்னதாக குறித்த குழுவின் யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது வரவேற்கத்தக்க ஒரு செயற்பாடாகக் கருதலாம். பொருளாதார நெருக்கடி நோயாளிகளின் உயிருடன் விளையாட அனுமதிக்கக்கூடாது.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 180/= |
| பச்சைமிளகாய் | - 500/= |
| தக்காளி | - 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 80/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 220/= |
| பாவற்காய் | - 400/= |
| வெண்டிக்காய் | - 80/= |
| கருணைக்கிழங்கு | - 150/= |
| பயற்றங்காய் | - 200/= |
| லீக்ஸ் | - 200/= |
| பீற்றூட் | - 120/= |
| கறிமிளகாய் | - 300/= |
| முருங்கைக்காய் | - 200/= |
| போஞ்சி | - 400/= |
| கத்தரி - தம்புள்ள | - 150/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 203/= |
| கனடா டொலர் - | 231/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 343/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 232/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 400/= |
| சுவிஸ் பிராங் - | 356/= |
| அமெரிக்க டொலர் - | 315/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 214/= |
| கனடா டொலர் - | 243/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 358/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 243/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 417/= |
| சுவிஸ் பிராங் - | 375/= |
| அமெரிக்க டொலர் - | 326/= |



(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் பெரிய குழுவை நிர்வகிக்க வேண்டி இருக்கும். அப்போது நீங்கள் வேலைகளை இழுத்துப்போட்டுச் செய்ய முடியாது. அந்த நிலையில், மற்றவர்களிடம் இருந்து வேலை வாங்க உங்களுக்குத் தெரிய வேண்டும். உங்களுக்கு வேலை பார்க்கத் தெரிந்தோ, நீங்களே வேலை பார்த்தோ பிரயோஜனம் ஏதுமில்லை. அதனால் உங்கள் குழுவைவிட சற்றுக் குறைவான பெர்ஃபாமன்ஸ் கொண்ட குழுவின் தலைவருக்கான பதவி உயர்வைத்தான் நிர்வாகம் உங்களுக்குத் தரும்.

மற்றவர்களை வேலை வாங்கத் தெரிந்தவருக்குப் பதவி உயர்வு கிடைக்கும். அவர் குழு உறுப்பினர்களிடம் வேலை வாங்கியதால் மட்டுமே நிறையப் புரடக்டிவிட்டி கொண்டு வந்திருப்பார். இன்னும் அதிகம் பேர் கொண்ட குழுவை நிர்வகிக்க அவர்தான் சிறந்தவரே தவிர, எல்லாருடைய வேலையையும் இழுத்துப் போட்டுச் செய்யும் நீங்கள் அந்தப் பதவிக்கு சரியான ஆளில்லை. ஏனென்றால், பெரிய குழுவில் நிறையப் பேர் இருப்பார்கள். அவர்களுடைய வேலை எல்லாம் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வதன்மூலம் நீங்கள் எளிதில் பர்ன்-அவுட் ஆகிவிடுவீர்கள். இதனால் உங்கள் உற்பத்தித்திறன் குறைந்து, நிறுவனம் பாதிப்படையும் இல்லையா?" என்று கேட்கிறார் ஆசிரியர்.

"நவீனமயமான இன்றைய உலகிலும் பெண்களுக்கு பதவி உயர்வு சில சமயங்களில் மறுக்கப்படவே செய்கிறது. மெக்கின்சி ஞ கோ மற்றும் லீன்இன்.ஆர்க் நிறுவனங்கள் இணைந்து 2019-ல் நடத்திய ஆய்வில் பெண்களுக்கு முகாமையாளர் மட்டத்தில் பதவி உயர்வு தருவது மறுக்கப்படுகிறது என்றும், இதனாலேயே மிகப் பெரிய உயர்பதவிகளில் பெரும்பாலும் பெண்களைக்காண முடிவதில்லை என்றும் கண்டறிந்துள்ளனர். இதில் சம்பள வித்தியாசங்கள் வேறு சேர்ந்துகொள்கின்றன. பணிக்கு ஆளெடுக்கும் போதிலிருந்தே இந்த வித்தியாசம் ஆரம்பித்து விடுகிறது.

### உங்கள்முன் உள்ள கேள்விகள்

புரொமோஷன் என்கிற எண்ணம் நமக்குள் எப்படி வருகிறது என்பது சுவாரஸ்யமான கேள்வி. பதவி உயர்வு வேண்டும் என்று நாமே ஆசைப்படுவதில்லை. நம் நண்பரோ, சக ஊழியரோ, கணவர்/மனைவியோ, 'நீ பார்க்கிற வேலைக்கு பதவி உயர்வு கிடைத்தே ஆக வேண்டும்' என்று சொல்ல ஆரம்பிக்கும்போதுதான் நாம் பதவி உயர்வைப் பெற வேண்டும் என்று நினைக்க ஆரம்பிக்கிறோம்.

'பதவி உயர்வு இப்போது எனக்கு ஏன் தரப்பட வேண்டும்?', 'இந்தப் பதவியை நான் ஏன் பெற நினைக்கிறேன்?', 'இந்தப் பதவி என்னை எங்கே கொண்டு போகும்...' இந்தக் கேள்விகளுக்கான விடையை நாம் நன்கு ஆய்ந்தறிந்து கண்டுபிடித்து விட்டோம் எனில், பதவி உயர்வைப் பெறுவது எப்படி என்கிற கேள்விகள் தோன்றும். 'எப்படி இந்தப் பதவி உயர்வை நான் பெறப்போகிறேன்', 'இப்போது செய்யும் வேலைகளில் இருந்து நான் எதிர்பார்க்கும் பதவி உயர்வுக்கான பொறுப்புகளுக்கு நான் என்னை எப்படி மாற்றிக்கொள்ளப் போகிறேன்' என்ற கேள்விகளுக்கான பதிலை நீங்கள் கண்டுபிடித்தாக வேண்டும்.

**"பதவி உயர்வு என்பது ஒரு விசித்திரமான விஷயம். 'எல்லாம் எனக்குத் தெரியும்' என்கிற ஈகோவில் இருக்கும் பணியாளரும் தோற்றுப்போகிறார். எல்லாம் இருந்தும் என்னிடம் இதற்கான தகுதி இருக்கிறதா என்று சந்தேகப்படும் பணியாளரும் தோற்றுப்போகிறார். அவர்களின் தோல்வி குறித்து ஒருவர் எரிச்சலுடனும், மற்றொருவர் புலம்பலுடனும் நிறுவனத்தில் செயல்படுகின்றனர்**

பதவி உயர்வு குறித்த உங்களுடைய ரியாக்ஷன் எப்படிப்பட்டதாக இருக்கப் போகிறது. இந்தப்பதவி உயர்வு உங்களுக்கு ஏன் தரப்பட வேண்டும்?, இந்தப் பதவி உயர்வு உங்களுக்கு ஏன் தேவை? என நினைக்கிறீர்கள், நீங்கள் அதற்கு தகுதியானவர் என்பதாலா?, கூடுதல் சம்பளத்துக்கா?, அதிகாரத்துக்கா? அல்லது கௌரவத்துக்கா? 'நான் நன்றாக வேலை செய்கிறேன் என்பதை அங்கீகரிக்க, என் பொஸ் எனக்குப் பதவி உயர்வு தந்தே ஆக வேண்டும்' என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

இதில் எதுவாக இருந்தாலும் சரி, அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால், எது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால் மட்டுமே அதற்கேற்ற பாதையைத் தேர்ந்தெடுத்து, அதில் பயணித்துப் பதவி உயர்வைப் பெறலாம்.

### நல்லுறவைப் பேணுங்கள்

உங்களுடைய எதிர்கால தொழில் என்பது தற்போது நீங்கள் பணி செய்யும் பணியிடத்தில் நல்லுறவுகளை வளர்ப்பதன் மூலம் ஒளிமயமாக மிளிர வாய்ப்புள்ளது. நல்ல மரியாதை மற்றும் புரிதலுடன்கூடிய உறவானது, எப்போது எந்த அளவுக்கு உங்களுக்கு எதிர்காலத்தில் உதவும் என்பதைத் தற்போது கணிக்கவே முடியாது. யார், எப்போது, எங்கே எதிர்காலத்தில் உதவுவார்கள் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

உங்கள் பொஸ் என்றில்லை. உங்களுக்குக் கீழே வேலை பார்க்கும் நபர்கூட வேலையை விட்டுச் சென்று ஒரு தொழில் தொடங்கி உங்கள் நிறுவனத்தைவிட பெரிதாக வளர்ந்துவிடலாம். எனவே, பணியிடத்தில் சக பணியாளர்களிடம் அன்பு கொண்டவராக, மரியாதை தருபவராக இருங்கள். நன்கு வேலை செய்து நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்துக் காத்திருங்கள். பதவிகள் பலவும் உங்களை தேடிவரும் என்று சொல்லி முடிக்கிறார்" ஆசிரியர்.

வாழ்வின் பெரும் பகுதியை ஆக்கிரமிக்கும் வேலையில் முன்னேற்றம் என்பதை நாம் மிகவும் விரும்புகிறோம். அதைப் பெற எதை எல்லாம் செய்ய வேண்டும்?, எதை எல்லாம் செய்யக் கூடாது? என்பதை விளக்கமாக மிகவும் எளிய நடையில் சொல்லும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில்
உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழுங்க முடியும். - 0753780530

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

-------------------------------------

### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

-------------------------------------

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார் படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

-------------------------------------

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457




# பொருளாதார நெருக்கடியில் “பிரிக்ஸ்” எதனைச் சாதிக்கும்?



- அருணன் -

**புவி அரசியலின், புவியியல் சார்ந்த பொருளாதாரத்தின் மிக முக்கிய தருணத்தில் பிரிக்ஸ் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் இந்த ஆண்டு கூடின. கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகான முதல் நேரடிக் கூட்டம் இது ரஷ்ய-உக்ரைன் போர் தொடங்கிய பிறகு நடைபெறும் முதல் நேரடிக் கூட்டமும் இதுதான்.**

வளர்ந்துவரும் முக்கிய பொருளாதார நாடுகளாகக் கருதப்படும் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய வற்றின் கூட்டமைப்பு, பிரிக்ஸ் (BRICS - அந்நாட்டுப் பெயர்களின் முதலெழுத்துக ளின் இணைவு) ஆகும். ஒவ்வோர் ஆண் டும் சுழற்சி முறையில் நாடுகள் தலைமைப் பொறுப்பு ஏற்றுவரும் நிலையில், இந்த ஆண்டு தென் ஆபிரிக்கா தலைமை வகிக் கிறது.

அந்த வகையில், பிரிக்ஸ் கூட்டமைப் பின் 15ஆவது ஆண்டுக் கூட்டம், அந்நாட்டின் ஜோகனஸ்பர்க் நகரில் ஆகஸ்ட் 22 முதல் 24 வரை நடைபெற்றது. கடந்த வாரம் முடிவடைந்த இந்த மாநாடு சர்வதேச பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில இந்த வார பேசுபொருளாக இருப்பதால், அதனையிட்டு இந்த வார பொருண்மியத் தில் சுருக்கமாகப் பார்ப்போம்.

### பிரிக்ஸ் பின்னணி

பொருளாதாரரீதியாக வேகமாக வளர்ச் சியடைந்துவரும் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள், 2050இல் உலகப் பொருளாதாரத்தில் கூட்டாக ஆதிக்கம் செலுத்தும் என கோல்டுமன் சாக்ஸ் நிறுவ னத்தின் தலைமைப் பொருளியலாளராக இருந்த ஜிம் ஓ'நீல், 2001இல் எழுதிய கட் டுரை ஒன்றில் கணித்திருந்தார். இந்த நாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு ‘பிரிக்’ என்கிற பதத்தை முதலில் பயன்படுத்தியவர் அவர்தான்.

அமெரிக்கா, அதன் மேற்குலகக் கூட்டா ளிகள் ஆகியவற்றின் உலகளாவிய மேலா திக்கத்துக்குச் சவால்விடும் வகையிலான ஒரு கட்டமைப்பை உருவாக்க, ரஷ்யாவின் முன்னெடுப்பில் இந்த நாடுகள் 2009இல் ஒரு குழுவாக ஒன்றிணைந்தன. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகியவை நிறுவன உறுப்பினர்களாக இருந்து தொடங்கிய இந்தக் கூட்டமைப்பில், இந்த நாடுகளை விட மக்கள்தொகையிலும் பொருளாதா ரத்திலும் சிறிய நாடான தென் ஆபிரிக்கா 2010இல் இணைந்தது.

ஐ.நா., உலக வங்கி, பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள் (OPEC) போன்ற ஓர் அதிகாரபூர்வமான பலதரப்பு அமைப்பாக இல்லையென்றாலும், இன்று உலக அரசி யலில் ஒரு முக்கிய சக்தியாக பிரிக்ஸ் பரி ணமித்திருக்கிறது.

உலக மக்கள்தொகையில் பிரிக்ஸ் நாடுகளின் பங்கு 41.5% ஒட்டுமொத்த நிலப்பரப்பில் 26.7% மக்கள்தொகை, நிலப் பரப்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) ஆகியவற்றில் உலகளவில் முதல் பத்து இடங்களுக்குள் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் உள்ளன. ஜி -20 கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரிக்ஸ் நாடுகளின் ஜிடிபி மதிப்பு, ஒட்டுமொத்தமாக 28.06 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் அந்நியச் செலாவணி மதிப்பு, ஒட்டு மொத்தமாக (உத்தேசமாக) 4.46 டிரில்லி யன் அமெரிக்க டாலர்கள் (2018).

### பிரிக்ஸ் ஆண்டுக் கூட்டம்

புவி அரசியலின், புவியியல் சார்ந்த பொருளாதாரத்தின் மிக முக்கியத் தரு ணத்தில் பிரிக்ஸ் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் இந்த ஆண்டு கூடின. கொவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகான முதல் நேர டிக் கூட்டம் இது “ரஷ்ய-உக்ரைன்” போர் தொடங்கிய பிறகு நடைபெறும் முதல் நேர டிக் கூட்டமும் இதுதான். சோஷலிஸ்டான லூலா டி சில்வா, பிரேசிலின் அதிபராக மீண்டும் தேர்தெடுக்கப்பட்ட பிறகு இந்தக் கூட்டத்தில் முதல் முறையாகப் பங்கெடுத் தார்.

அடிப்படையில், பிரிக்ஸ் என்பது ‘வளர்ந்து வரும் பொருளாதார’ங்களின் ஒரு கூட்ட மைப்பாகும். எனவே, பொருளாதாரப் பிரச் சினைகள் குறித்தே அது முதன்மைக்கவ னம் கொண்டிருக்கிறது. அந்த வகையில், ரஷ்ய-உக்ரைன் போரின் புவி அரசியல் பின்னணியில், அது மேலதிக முக்கியத்து வம் பெறுகிறது.

அதன் காரணமாகவே மேற்கத்திய நாடுகள் தங்கள் கவனத்தைக் கூர்மைப் படுத்தியிருக்கின்றன. ‘ஒருவேளை அழைக்

(21ஆம் பக்கம் பார்க்க)




# சந்திரயான் 3 வெற்றியும் இலங்கை – உலகப் பொருளாதாரத் தாக்கமும்

- **சந்திரயான் - 3**
- **உலக மற்றும் இலங்கைப் பொருளாதாரங்களுக்குச் சாதகமான தாக்கங்கள்**
- **இந்திய மற்றும் இலங்கைப் பொருளாதாரங்களுக்கு ஊக்கம்**
- **இலங்கை வணிகங்களுக்குப் பெரும் ஊக்கம்**
- **இலங்கை வணிகங்களுக்கான செய்திகள்**
- **இலங்கை செய்யக்கூடிய கொள்கை மாற்றங்கள்**



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இஸ்ரோவின் சந்திரயான் திட்டத்தின் கீழ் சந்திரயான்-3 (மூன்றாவது) மற்றும் மிக சமீபத்திய இந்திய சந்திர ஆய்வுப் பணியாகும். இதில் 'விக்ரம்' எனப்படும் லேண்டர் மற்றும் 'பிரக்யான்' எனப்படும் ரோவர் ஆகியவை சந்திரயான்-2 க்கு இணையானவை. அதன் உந்துவிசைத் தொகுதி ஒரு சுற்றுப்பாதை போல் செயற்படுகின்றது.

சந்திரயான்-3 ஜூலை 14, 2023 இல் ஏவப்பட்டது. சந்திரனின் தென் துருவத்தில் வெற்றிகரமாகச் சந்திரயான்-3 தரையிறங்கிய இடத்தினை 'சிவசக்தி' எனவும் தரையிறங்கிய ஆகஸ்ட் 23, 2023 தினத்தை 'இந்தியத் தேசிய விண்வெளி தினம்' எனவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார். சந்திரனின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் இந்திய ஆய்வுப் பணி இதுவாகும். மேலும் அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் சீனாவுக்குப் பின்பு நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கிய நான்காவது நாடு இந்தியாவாகும்.

இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை 'விக்ரம் சாராபா'யின் நினைவாக விக்ரம் என்கின்ற லேண்டருக்குப் பெயரிடப்பட்டது. ஸ்பெக்ட்ரோமீட்டர், கேமரா, மேக்னட்டோமீட்டர் உள்ளிட்ட சந்திர மேற்பரப்பை ஆய்வு செய்யப் பல்வேறு அறிவியல் கருவிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. ரோவர், பிரக்யான், "விஸ்டம்/wisdom" என்பதற்கான சமஸ்கிருத வார்த்தையின் பெயரால் பெயரிடப்பட்டது. இது சந்திர மேற்பரப்பில் 500 மீற்றர் வரை பயணித்து மண்ணின் கலவை மற்றும் புவியியல் பற்றிய தரவுகளை சேகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சந்திரயான்-3 திட்டம் இந்திய விண்வெளித் திட்டத்திற்கான ஒரு முக்கிய மைல்கல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சியில் நாட்டின் வளர்ந்து வரும் திறன்களுக்கு ஒரு சான்றாகும். இது சர்வதேச சமூகத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். ஏனெனில் இது நிலவின் தென் துருவத்திற்கு எதிர்கால பயணங்களுக்கு வழிவகுக்கிறது. நீர் மற்றும் பனி நிறைந்ததாக நம்பப்படுகின்றது.

இந்தப் பணி, இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் லேண்டர் மற்றும் ரோவர் வெற்றிகரமாகச் செயற்பட முடிந்தால் அது நீடிக்கப் படலாம். சந்திரனின் வரலாறு, புவியியல் மற்றும் வளங்களுக்கான சாத்தியக்கூறுகள் பற்றிய மனிதப் புரிதலை மேம்படுத்த இந்தப் பணியால் சேகரிக்கப்பட்ட தரவு பயன்படுத்தப்படும். சந்திரனின் மேற்பரப்பில் நிரந்தர மனித இருப்பை நிறுவுவது உட்பட, சந்திரனுக்கான எதிர்காலப் பயணங்களைத் திட்டமிடவும் இது உதவும்.

### உலக மற்றும் இலங்கைப் பொருளாதாரங்களுக்குச் சாதகமான தாக்கங்கள்

சந்திரயான்-3 வெற்றிகரமாக முடிவடைந்தால், உலக மற்றும் இலங்கைப் பொருளாதாரங்களுக்குப் பல சாதகமான தாக்கங்கள் ஏற்படும். உதாரணமாக:

* அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் பொதுமக்களின் ஆர்வத்தை அதிகரித்தல்: உலக மக்களின் கற்பனையைப் படம்பிடித்து, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் தொழிலைத் தொடர அவர்களை ஊக்குவிக்கும். மிகவும் திறமையான பணியாளர்களை உருவாக்கவும் புதுமைகளை அதிகரிக்கவும் இது உதவும்.

* சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல்: இந்தப் பணிக்குப் பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புத் தேவைப்படும். இது நாடுகளுக்கிடையே நம்பிக்கை மற்றும் புரிதலை வளர்க்கவும் அமைதி மற்றும் செழிப்பை மேம்படுத்தவும் உதவும்.

* சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்: சந்தி




ரனையும் அதன் வளங்களையும் நன்கு புரிந்துகொள்ள இந்தப் பணி உதவும். பூமியில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க இந்த அறிவு பயன்படுத்தப்படலாம்.

சந்திரயான்-3 வெற்றிகரமாக நிறைவடைந்தமை உலக மக்கள் அனைவருக்கும் பெரும் வெற்றியாக அமைவதோடு, இலங்கைப் பொருளாதாரங்களுக்குப் பல வழிகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

### இந்திய மற்றும் இலங்கைப் பொருளாதாரங்களுக்கு ஊக்கம்

சந்திரயான்-3 திட்டமிட்டபடி பூரணமாக வெற்றிகரமாக முடிவடைந்தால் இந்திய மற்றும் இலங்கைப் பொருளாதாரங்களுக்குப் பல வழிகளில் பெரும் ஊக்கமாக இருக்கும்.

* பொருளாதார ஊக்கம்: இந்தப் பணிக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, அத்துடன் உற்பத்தி மற்றும் வெளியீட்டுச் செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க முதலீடு தேவைப்படும். இது இந்தியாவிலும் இலங்கையிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன் பொருளாதார நடவடிக்கைகளையும் அதிகரிக்கும்.

* தொழில்நுட்ப முன்னேற்றம்: விண்வெளி ஆய்வில் இந்தியா மற்றும் இலங்கையின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்த இந்தப் பணி உதவும். இது அவர்களை உலகளாவிய விண்வெளித் துறையில் அதிக போட்டித்தன்மையடையச் செய்யும் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீட்டை ஈர்க்கும்.




* அறிவியல் சார்ந்த அறிவு: சந்திரன், அதன் வளங்கள் மற்றும் எதிர்கால மனித ஆய்வுக்கான அதன் திறனைப் பற்றிய நமது புரிதலை மேம்படுத்த இந்தப் பணி உதவும். இது இரு பொருளாதாரங்களுக்கும் பயனளிக்கும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும்.

* சர்வதேச ஒத்துழைப்பு: இந்தப் பணியானது அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற பிற விண்வெளி நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை உள்ளடக்கியது. இது சர்வதேச சமூகத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை உயர்த்துவதனால் இலங்கையினால் இது சார்ந்த மற்றத் துறைகளில் ஒத்துழைப்பதற்கான புதிய வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும்.

* சுற்றுலா: சந்திரயான்-3 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்குவது இந்தியாவிலும் இலங்கையிலும் சுற்றுலாவை மேம்படுத்தும். இதனால் உலகெங்கிலும் உள்ள மக்கள் சந்திரனை வெற்றிகரமாக ஆராய்ந்த நாடுகளுக்குச் செல்வதில் ஆர்வம் காட்டுவார்கள்.

எனவே, சந்திரயான்-3 வெற்றிகரமாக முடிவது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஒரு பெரிய சாதனையாக இருக்கும். அத்துடன் தொலைநோக்குப் பொருளாதாரம் மற்றும் அறிவியல் துறைகளில் பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

### இலங்கை வணிகங்களுக்கு பெரும் ஊக்கம்

"சந்திரயான்-3" இதுவரையில் வெற்றிகரமாக முடிவடைந்தமை இனிவரும் காலங்களில் இலங்கை வர்த்தகங்களுக்குப் பல வழிகளில் பெரும் ஊக்கமாக அமையப் போகின்றது.

* அதிகரித்த முதலீடு: இந்தப் பணிக்கு குறிப்பிடத்தக்க முதலீடு தேவைப்படும். பாகங்கள் அல்லது சேவைகளை வழங்குதல் போன்ற பணிக்கான விநியோகச் சங்கிலியில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை இலங்கை வணிகங்களுக்கு இது உருவாக்கும்.

* மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் திறன்கள்: விண்வெளி ஆய்வில் இலங்கையின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்த இந்தப் பணி உதவும். இது உலகளாவிய விண்வெளித் துறையில் இலங்கை வணிகங்களை அதிகப் போட்டித்தன்மை கொண்டதாக மாற்றும் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீட்டை ஈர்க்கும்.

* சுற்றுலா, கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்ற பல பகுதிகளில்: எடுத்துக்காட்டாக, விண்வெளி ஆய்வில் ஆர்வமுள்ள பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் இலங்கை வணிகங்கள் புதிய சுற்றுலா மார்க்கங்களினை உருவாக்கலாம்.

* மேம்படுத்தப்பட்ட நற்பெயர்: சந்திரயான்-3 வெற்றிகரமாக நிறைவு செய்யப்படுவது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னணியில் இருக்கும் ஒரு மூலோபாய இடமாக (Strategic Location) இலங்கையின் நற்பெயரை மேம்படுத்தும். இது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு இலங்கையை மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்றும்.

எனவே "சந்திரயான்-3" வெற்றிகரமாக முடிவடைந்தால், இலங்கை வணிகங்கள் வளர்ச்சியடைவதற்கும் செழிப்பதற்கும் ஒரு முக்கிய வாய்ப்பாக இருக்கும்.

### இலங்கை வணிகங்களுக்கான செய்திகள்

இலங்கை வணிகங்களுக்கான சில குறிப்பிட்ட செய்திகள் இங்கே:

* விநியோகச் சங்கிலியில் ஈடுபடுதல்: வருங்கால சந்திரயான் பணிக்கான கூறுகள் மற்றும் சேவை வழங்கலில் உரிய வணிகம் நிறுவனங்கள் வழங்குவதற்கான ஈடுபடுவதற்கான நேரம் இது. இலங்கையின் வர்த்தகத் திறன்களை உலகிற்கு வெளிப்படுத்தவும், புதிய வர்த்தகத்தை ஈர்க்கவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

* விண்வெளித் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல்: சந்திரயான்-3 வெற்றிகரமாக முடிவடைவது விண்வெளித் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்யும் வணிகங்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கும். இலங்கை வணிகங்கள் இந்தப் பகுதியில் ஆர்வமாக இருந்தால், இப்போது திட்டமிடத் தொடங்குவதற்கான சிறந்த நேரமாக இனிவரும் காலம் அமையும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு தொழிலின் தொடக்க புள்ளியே நம்பிக்கை தான்...

**நேர்கண்டவர் - ஞா.கவினி**

இயற்கை நமக்கு தந்திருக்கும் அரும் பெரும் கொடைகளை பாதுகாத்து இயற்கையோடு இணைந்து வாழ்தல் என்பது பெரும்வரம்.

தாய் நிலத்தில் உள்ள வளங்களை தேடி கண்டுபிடித்து அவற்றிற்கு பெறுமதி சேர்த்து இயற்கையின் உன்னதங்களை உலகிற்கு அறிமுகப்படுத்துகிறார் அம்மா உற்பத்திகளின் உரிமையாளர் திரு சுப்பிரமணியம் கஜநாதன் அவர்கள்.

ஏற்கனவே பல நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவமும் மனதில் சாதிக்கும் திடமும் என தனது சொந்த தொழில் முயற்சியில் மூன்று வருடங்களாக அயராது பயணித்துக் கொண்டிருக்கும் சுயதொழில் முயற்சியாளரை தமிழர் பொருண்மியம் செவ்வி கண்டது.

காலம் காலமாக வேலையில்லா திண்டாட்டங்களையும் எதிர்ப்பு பேரணிகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இங்கே எங்கள் கண்முன்னே கொட்டிக் கிடக்கின்ற வளங்களை யார் யாரோ எல்லாம் அள்ளிச்சென்று அவற்றை மீளவும் பொதி செய்து எமக்கே விற்று தம்மை வளப்படுத்தி வருகின்றனர் என்பது ஒரு துர் அதிர்ஷ்டவசமான உண்மை.

இது இப்படியிருக்க பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருந்து தன்னை விடுத்துக் கொண்டு இயற்கை தந்திருக்கின்ற அழகான வாழ்வியலை நுகர்ந்து மற்றவர்களுக்கும் அதனை பகிர்ந்து கொண்டிருக்கிறார் இந் நிறுவனத்தின் இயக்குனர் கஜநாதன்.

நிறுவனங்களில் பணிபுரிந்த காலங்களில் சிறந்த கூட்டுறவாளருக்கான விருதினையும் பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பது கூடுதல் மகிழ்ச்சி.



**அம்மா எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் திருவாளர் சு.கஜநாதன்.**

பலரும் எதிர்பார்க்காத வண்ணம் பல வகை பழங்களிலும் விதைகளிலும் இலைகளிலுமாக மாத்திரமன்றி காய்கறிகளிலும் தேநீரும் குடிநீரும் தயாரித்து வருகிறார்.

கொட்டிக்கிடக்கின்ற இந்த வளங்களை தேடி கண்டுபிடித்து, அவற்றை பதப்படுத்தி பக்குவமாக பெறுமதி சேர்த்து விற்பனை செய்வதோடு பலருக்கு வழிகாட்டியாகவும் இருப்பது என்பது அத்தனை சாதாரணமான விடயம் அல்ல. இப்படி இலை மறை காயாக நமக்குள் ஒளிந்திருக்கும் திறமைசாலிகளையும் புத்தாக்குனர்களையும் கண்டுபிடித்து அவர்களுக்கு உரம் சேர்த்துக் கொண்டிருக்கிறது தமிழர் பொருண்மியம்.

### ஆரம்ப காலங்கள்

அம்மா உற்பத்திகள் என்ற பெயரில் தொழிலை ஆரம்பித்து மூன்று வருடங்கள் கடக்கிறது. மூன்று வருடங்கள் என்பது எனக்கு மூன்று யுகங்களாக தெரிகிறது.




ஆரம்ப காலங்களில் எங்களது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் அவற்றை காட்சிப்படுத்துவதற்கும் பெரும்பாலான விநியோகஸ்தர்கள் தயக்கம் காட்டினார்கள். ஏனெனில் புதிது புதிதாக இயற்கை மூலிகைகளையும் இயற்கை தந்த வளங்களையும் அறிமுகப்படுத்தும் போது மேற்கிலிருந்து வரும் பெரும் வணிக நிறுவனங்களுடன் எங்களால் போட்டியிட முடியாது என்று அவர்கள் கருதினார்கள். அது என்னவோ உண்மைதான். ஆரம்ப காலத்தில் நமது உற்பத்தி பொருட்களை அறிமுகப்படுத்தும் போது மிகுந்த சவால்களை சந்திக்க வேண்டி இருந்தாலும், இன்று சொந்த நாட்டில் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் அம்மா உற்பத்திகளுக்கு தனி மரியாதையும் கேள்வியும் இருக்கிறது என்பது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விடயம். இன்னும் இந்த உற்பத்திகளை அதிகரிக்கவும் பெறுமதி சேர்க்கவும் விரும்புகிறேன். எனது அடுத்த தலைமுறைக்கும் இன்றைய சமூகத்தினருக்கும் இயற்கை பற்றியும் இயற்கையின் வளங்கள் பற்றியும் தெரிவிக்க வேண்டும், தெரியப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன். உணவே மருந்து என்று இருந்த காலம் போய் தற்போது உணவுக்கு முன்னும் பின்னும் மாத்திரைகளை உட்கொள்ளும் கலாச்சாரத்திற்குள் நாங்கள் தள்ளப்பட்டு கிடக்கிறோம் .இது நிற்க ஒவ்வொரு நோய்களுக்கும் ஒவ்வொரு விதமான மாத்திரைகளை அருந்தி அதன் பக்க விளைவுகளால் இன்று பலவீனப்பட்டு கிடக்கிற நம் சமூகத்தினருக்கு எமது முன்னோர்கள் காட்டிய வழியில் மூலிகைகளாலும் உள்நாட்டு வளங்களாலும் நம்மையும் நமது உடல் பலவீனங்களையும் சரிபடுத்திக் கொள்ள முடியும் என்று நம்பிக்கை அளிக்கிறோம். எங்களிடம் 30க்கும் அதிகமான உற்பத்திகள் இருக்கிறது. ஒவ்வொன்றும் இயற்கையை மூலதனமாகக் கொண்டவைதான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோயை குணப்படுத்தக் கூடியதும் மனிதர்களை மருந்துகள் அற்ற தேசத்திற்கு அழைத்துச் செல்லக்கூடியதுமான தேனீர்களும் குடிநீர்களும் உணவு பதார்த்தங்களும் என்று எமது முன்னோர்கள் சொன்ன அத்தனை வழிகளையும் உபயோகிக்கிறோம்.




தற்போது எங்களிடம் பத்துக்கு மேற்பட்ட பணியாளர்கள் வேலை செய்தாலும் அவர்கள் ஒவ்வொருவரும் எங்களது குடும்ப உறுப்பினர்களைப் போல தொழிலில் மிகவும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்றனர். ஒரு தொழில் வெற்றிகரமாக பயணித்து செல்ல வேண்டும் என்று சொன்னால் அங்கே மிகச் சிறந்த நிர்வாகிகளும் பணியாளர்களும் நிச்சயமாக இருக்க வேண்டும். அப்படித்தான் எங்களுடைய தொழில் கூடத்திலும் எங்களுடைய ஒவ்வொரு பணியாளர்களும் தான் மிகப்பெரும் மூலதனமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.










### எதிர்காலம்

எமது இந்த தொழிலை குறித்து எமக்கு நீண்ட கனவுகள் இருக்கிறது. இன்னும் அதிகமான மூலிகைகளையும் உள்நாட்டு வளங்களையும் தேடி கண்டுபிடித்து அவற்றிற்கு பெறுமதி சேர்க்க வேண்டும். அதோடு நமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பங்காளிகளாய் இருக்கின்ற அத்தனை பணியாளர்களுக்கும் ஊதியங்களையும் சலுகைகளையும் அளிப்பதோடு இன்னும் அநேகருக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். இந்த நிறுவனம் ஒரு மிகச் சிறந்த ஏற்றுமதி நிறுவனமாக ஒரு காலத்தில் இருக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஒரு தொழிலின் தொடக்க புள்ளி என்பது நம்பிக்கை தான் . அந்த நம்பிக்கையை பற்றி பிடித்தபடி இறுதி வரைக்கும் நாங்கள் ஓடிக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நமது இலக்கை நோக்கிய பயணத்தில் வெற்றியை அடைய முடியும் என்கிறார் அம்மா எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் திருவாளர் சு.கஜநாதன்.

# வேட்டைத் திருவிழா

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

விவசாயிகளின் கஸ்டம் யாருக்காவது புரிகிறதா? அவனுடைய உற்பத்தியை அவன் முழுமையாக அனுபவிக்க முடிகிறதா?

இதைத்தான் நாட்டார்பாடல் “புனத்தில் அடரும் கரி கண்டுடனே புள்ளிமான் பல சாதிக்குப் பிரித்துக் கொடுத்து தனக்கு மிஞ்சிய பொருள் கொண்டேகும் மனிதரே” - என்று பாடினார்கள்.

விவசாயிகளுக்கு மிகப் பெரிய எதிரிகள் குரங்குகளும் பன்றிகளும்தான். பெருவனங்களை அடுத்துச் சேனை உள்ளவர்களுக்கு யானைகளாலும் ஆபத்து வரும்.

பறவைகளில் பெரும்பாலும் தினையன் சிட்டு, புறா, கிளி , மயில் என்பன பெரிய அளவில் அழிவைச் செய்கின்றன. புதிதாக வயல் பரம்படித்துச் சேறு வயலில் விதை நெல் விதைத்துவிட்டு விவசாயிகள் தேநீர் அருந்த மேடேறினார்கள். திடீரென வானத்தில் கருமுகில் கூட்டமொன்று கவிந்து வயலை நோக்கி இறங்கியது. நானும் பார்த்துக் கொண்டேயிருந்தேன். வேலையாட்களும் வியந்து நோக்க அந்த மேகக் கூட்டம் அப்படியே சேற்று வயலில் இறங்கியது. அத்தனையும் மயில்கள். அவ்வளவு பெருந் தொகையாக மயில்கள் பறந்து வருவதை அதற்கு முன் நான் பார்த்தேயில்லை.

தகரங்களிலும் கிடந்த கட்டைகளிலும் பேரொலி எழுப்பி அவைகளை விரட்டினாலும் அந்த வயலைத் திருப்பியும் விதைக்க வேண்டியதாயிற்று. மயில்கள் மனிதர்களை தாக்கக் கூடியவை. அவை முருகப்பெருமானைச் சுமக்கிறதால் அதை தெய்வமாக்க என்னால் முடியவில்லை.

மிளகாய்க் கன்றுகளை நட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகப் பராமரித்து மிளகாய்ப் பழங்கள் தெரியத் தொடங்கியதும் மயில்கள் உள்ளே அடர்ந்து கிடக்கும் செடிகளின் மறைவில் நுழைந்து வெளியே வரும்போது மிளகாய்ப் பழங்கள் காணாமல் போய்விடும். மீதமாக இருப்பதைப் பிடுங்கிக் காயவைத்தாலும் அவற்றையும் மேய வரும்நிலக்கடலை போட்டு அது காய்களாக்கி



அவை முற்றத் தொடங்கும். மயில் தோட்டத்தில் மேய வரும்.

‘ச்சா அது பூச்சி புழுக்களைச் சாப்பிடும் என்று அலட்சியமாக இருந்தோமோ கடலைச் செடியின் பக்கவாட்டாக கிளறி கடலைகளை தின்று விடும் நாம் விளைந்த பின் செடியை இழுத்தால் அதில் வெறும்



வேரை மட்டுமே பார்க்கலாம். பயற்றை, பயறு கௌபீ எல்லாவற்றிற்கும் இதேகதி தான்.

விதைத்த நெல்லுக்கு மூன்று தினங்களுக்கு இரவில் ஆங்காங்கே தீப்பந்தங்களை வைத்து காவலிருக்காவிட்டால். ‘சிறகை’ எனப்படும் நீர்ப்பறவை நெல்லை உறிஞ்சிக் கொண்டு போய்விடும். பகலில், காலை நிலம் வெளிக்கு முன் வயலில் கிளிகள் இறங்கி விதைகளைப் பொறுக்கும் இவைகளுடன் சிட்டுக் குருவிகளும் சேர்ந்து கொள்ளும். எனவே சீனவெடிகளுடன் சிறுவர்கள் காவலிருக்க வேண்டும். வெயிலேற அவை விடைபெற்றுப் போகப்புறாக்கள் இறங்கத் தொடங்கும். மறுபடி மாலை வெயிலடையக் கிளிகளும் குருவிகளும் வரும். இவை நிலக்கடலை பயற்றை சோளன் போன்றவற்றையும் ஒரு கை பார்த்து விடும்.

இவைகளெல்லாம் வனம் சார்ந்த பகுதிகளில்தான் என்று அலட்சியமாக இருக்கலாமா? அவை இப்போது நகர வாசிகளாகி விட்டன. என்பதை விரிவாக்க முன் பன்றிகளைப் பார்ப்போம். பன்றிகளுக்கு நெல் நிலக்கடலை மரவள்ளி, கோரைக்கிழங்கு என உழுது பிரட்டி தின்பதில் வெகு பிரியம். நெல் பால்பிடிக்கும் போதே வயலில் இறங்கத் தொடங்கிவிடும்.

நிலக்கடலையும் கடலை வடிவம் கொள்ளும் போதே தின்ன ஆரம்பிக்கும். சோளப்பயிரை தன் கட்டைக்காலால் சரித்து சப்பும் அழகிருக்கிறதே அபாரம். இதெல்லாம் மரத்திலேறி நின்றே ரசிக்க முடியும். பன்றியின் கடைவாயின் இருபுறமும் ஏர் போல் இரண்டு பற்கள் உண்டு. அது நிலத்தை அந்தப்பற்களால் உழுது கிழங்குகளை கிண்டித் தின்பதற்கு என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். அதைக்கொண்டு



அது தன் எதிரிகளை வெட்டிச் சாய்த்து விடும் பன்றி வெட்டிய மனிதர்கள் உயிர் தப்புவது மிகக் கடினம்.

பன்றிக்கும் நாய்களுக்கும் ஏதோ ஒரு ஜென்மப்பகை இருக்கிறது. ஏனென்றால் நாயால் கடியுண்டவர் பன்றிஇறைச்சி சாப்பிடக்கூடாது. அதுவும் விசர்நாய்கடித்த வர் ஆயுளுக்கும் பன்றி இறைச்சியை ஒதுக்கி விடவேண்டும். அதே போல நாய் களும் பன்றிஇறைச்சியை அல்லது அதன் உதிரத்தைத் சுவைத்தால் இறந்து போய் விடும். ஒரு கொசுறுத்தகவல் தேன் வதையை தின்கிற நாயும் உயிர் வாழ் வதில்லை. இதெல்லாம் என் சிறு வேட்டை அனுபவம்தான்.

சரி பன்றிகள் கூட்டமாக வரும்போது அவற்றை விரட்டி விடலாம். அதன் சிறுவர் களின் பாதுகாப்புக் கருதி அவை ஓடவே செய்யும். ஆனால் தனியன் பன்றி மூர்க்க மானது. காட்டில் அதற்குக் காலத்துக்கு காலம் குறைவற்ற உணவிருந்தாலும், அது பயிர்களை அழித்து (உண்பதைவிட உழக்குவது அதிகம்) உண்பதையே விரும்புகிறது. பயறிப்பழம் வெடுக்கு நாறிப் பழம், கோரைக்கிழங்கு பாலைப்பழம், பன்னைப்பழம், மகிழம்பழம், உலுவிந்தை எனச் சொகுசாகவே சாப்பிட்டாலும் அதன் இனப்பெருக்கம் விரைவானது. ஓர் ஈத்தில் பதினாறு குட்டிகளைப் போட வல்லது. கர்ப்பகாலம் கூடக் குறைவுதான்.

பன்றிகளுக்கு வேலி போட முடியாது. அவை நிலத்தை உழுது கீழாலேயே வந்துவிடும். அண்மைக்காலங்களில் பன்றிகளைக் கொல்வது குற்றம்' என அறி வித்தமையால் விவசாயிகள் பெரும் நட் டத்தை அடைந்துள்ளனர். பன்றிகளும் பத்திரிகை வாசிக்குமோ என்னவோ அவை களும் பயமேயில்லாமல் மனித நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளுக்கும் வந்து மர வள்ளிக்கிழங்குகளையும் நிலக்கடலை களையும் சாப்பிட முடிகிறது.

அடுத்து குரங்குகளைப் பார்த்தால் அவை மனிதர்கள் வாழும் பகுதிகளில் பெருமளவு காணப்படுகின்றன. பெருமளவு வாகனங்கள் செல்லும் சாலைகளைக் கடந்து பழமரங்களைத் தாக்குகின்றன.

மாம்பழங்கள், பலாப்பழங்கள், வாழைப் பழங்கள், மாதுளை, முருங்கை மரங்களில் பூக்களாகவே உருவுகின்றன. வெண்டி கத்தரி, பாப்பாசி எதுவும் மீதமில்லை. அநேகமான வீடுகளில் கூரை ஓடுகளைப் பிரித்து எறிகின்றன. சிறியான் குரங்குக ளின் அட்டகாசம் தென்னையின் குரும்பை களைக்கூட நாசம் பண்ணுகின்றன. மந்திகள் தோட்டப்பயிர்களைத் துவம்சம் செய்கின்றன. உற்பத்திகள் பற்றி ஓங்கிக் குரல்கொடுக்கும்எவரும்இந்த அழிவுகளை கருத்தில் கொள்ளவில்லை.

பண்டைக் காலங்களில் அரசர்களின் ஆட்சி நடக்கும்போது வன விலங்குகளால் அழிவுகள் ஏற்படும் காலத்தில் விவசாயி கள் மன்னனிடம் சென்று முறையிடுவார் கள். தமது பயிர்களைக் காத்துத் தரும்படி. அரசனும் தனது சேனை தானைகளுடன் வேட்டைக்கு நாட்குறித்து காட்டுக்குச் செல் வான். அங்கு கொல்ல வேண்டிய விலங்கு களைக் கொன்று ஏனையவற்றை காடு ளுக்கு துரத்திச் சென்று அனுப்பி வைப்பான்.

(துஸ்யந்தன், தசரதன், அர்ச்சுனன் பீமன், கிருஸ்ணர் என இன்னும்பலருடைய சரிதைகளிலும் கட்டப்பொம்மன் கதையி லும்காண்க) இதே வகையில் தெய்வங்க ளின் அவதார காலத்தில் அரசு செய்தோரும் செய்தார்கள். அவர்கள் அப்படி மக்களின் வளங்களைக் காத்து நாட்டின் செல்வத்தை பெருக்கி ஆடப்பட்ட வேட்டைகளை நினைவு கூரும் முகமாக இன்றும் ஆலயங்களில் அரசன் தேரேறி வலம் வருமுன் வேட்டை யாடி வருவது வழக்கமாக இருக்கும். அந்த தினம் 'வேட்டைத்திருவிழா' என அழைக் கப்படுகிறது.

நிகழும் அரசுகளில் மிக இலாவகமாக

> ‘பண்டைக் காலங்களில் அரசர்களின் ஆட்சி நடக்கும்போது வன விலங்குகளால் அழிவுகள் ஏற்படும் காலத்தில் விவசாயிகள் மன்னனிடம் சென்று முறையிடுவார்கள். தமது பயிர்களை காத்துத் தரும்படி. அரசனும் தனது சேனை தானைகளுடன் வேட்டைக்கு நாட்குறித்து காட்டுக்கு செல்வான். அங்கு கொல்ல வேண்டிய விலங்குகளைக் கொன்று ஏனையவற்றை காடுளுக்கு துரத்திச் சென்று அனுப்பி வைப்பான்.’

வனபரிபாலனம் என்று ஒரு பகுதிகளை யும் மாடு ஆடுகஷளும் விவசாயிகளைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன. வனவிலங்குகள் குடும்பக்கட்டுப்பாடே இல் லாமல் பல்கிப் பெருகியுள்ளன. யானைகள் ரயிலில் மோதி சாகின்றமையும் காட்டுவழி களில் மயில்கள் பெருகி நின்று வழிமறிப்ப தையும் குடும்பங்கள் நெருக்கமாக வாழ் கின்ற பகுதிகளில் குரங்குகள் சமையற் கட்டுவரை சென்று சமையல் செய்வதை யும் அரசாங்கம் வளர்த்து பெருமை கொள் கிறது.

அதேசமயம் விவசாயத்தைப் பெருக்க வும் வளர்க்கவும் பெருமளவு திட்டங்களை போட்டுக் கொண்டிருக்கின்றது. இது ஒட் டைச்சட்டியில் தண்ணீர் நிரப்புவது போல இல்லையா? இதில் இன்னுமொரு பக்கமும் இருக்கிறது அதையும் பார்த்து விடுவோம்.



# சந்தனமர வளர்ப்பு முறை

ஆனந்தன்
பிரேம்நாந்
லக்சி பண்ணை



சந்தனக் கன்றுகள் நடவிரும்பும் பண்ணையாளர்கள் இதற்குரிய பிரத்தியேக அனுமதியோடு உற்பத்தி செய்கின்ற பண்ணைகளிலோ அல்லது ஏதேனும் நிறுவனத்தின் ஊடாக மட்டுமே கொள்வனவு செய்ய வேண்டும்.

அதிக இலாபம் தரக்கூடிய தொழில்களில் சந்தன மர வளர்ப்பும் ஒன்று.

இது அதிகமாக வாசனைப் பொருட்கள் தயாரிக்கவே பயன்படுகின்றது.

இதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வாசனைத்திரவியங்களை செல்வந்தர்களே அதிக அளவில் பயன்படுத்துகின்றார்கள்

காரணம். இதன் விலை அதிகம் என்பதால். சந்தன மரங்களை அதிக அளவில் மேலைத்தேய செல்வந்த நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சந்தன மரம் மாத்திரம் அல்லாமல் வெள்ளம் பட்டை என்று சொல்லப்படும் அகர்வூட் மரங்களும் பெறுமதி மிக்க மரங்கள் என்பதால் இவை மேலைத்தேய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



சந்தன மரங்கள் ஆனது தென்னிந்திய காடுகளில் தானாகவே வளர்கின்றது. தற்பொழுது பரவலாக பல இடங்களிலும் வளர்க்கப்படுகின்றது.

சந்தன மரத்திலும்வெண் சந்தனம், செஞ்சந்தனம்என இரண்டு வகை உள்ளது இதில் செஞ்சந்தனத்திற்கே அதிக கேள்வி உள்ளது.

மரங்கள் நடும்போது 16 அடி நீள. அகல இடைவெளியில். அதாவது ஏக்கருக்கு 170 மரங்கள் நட வேண்டும், அதிக வெப்ப நிலை உள்ள இடங்களில் இதன் வளர்ச்சி குறைவாக காணப்படும் இதமான

வெப்பநிலை உள்ள இடங்கள் சந்தன மரங்களுக்கு ஏற்றன.

சந்தன மரங்களை பொறுத்தவரை இவைகள்காடுகளில்வளருகின்ற மரங் கள் ஆகும். ஆகையால் நிலத்தில் போது மான ஈரலிப்பு இருந்தால் போதும். அதிக ளவான நீர் கட்டமைப்புத் தேவைப்படாது.

மேட்டுநிலங்களில் மட்டுமே வளரக் கூடியமரமாகும்.

இதற்கு மேலதிக உரப் பயன்பாடு தேவையில்லை. வடிகால் வசதியுள்ள நிலங்கள், வேம்பு வளரும் நிலங்கள் அனைத்தும் சந்தன மர நடுகைக்கு ஏற்ற தாகும்,

நல்ல நீர் வளம், மற்றும் மண் வளமாக இருந்தால் போதும். செம்மண்ணில் சிறப் பாக வளரும் குறிப்பாக மணல் சார்ந்த மற்றும் அடர் களிமண் நிலங்கள், உவர் நிலங்கள் போன்ற இடங்களில் வளராது.

இதன் அறுவடை காலம் 20 தொடக்கம் 25 ஆண்டுகள் ஆகும். உங்களிடம் வர்த் தகத் தேவை இருந்தால் 20 ஆண்டுக ளுக்கு முன்பே அறுவடை செய்யலாம்.

ஓர் ஏக்கருக்குரிய வருமானம் இலங்கை ரூபா 40 கோடி வரை இருக்கும்,

நன்கு முற்றிய சந்தன மரங்கள் ஆனது அதன் வயதெல்லை வரும்போது அதன் பட்டைகள் வெடித்து வாசனையான பிசின்





போன்ற திரவம் வடிய ஆரம்பிக்கும்,

அதன் பிறகு அறுவடை செய்தால்

உங்கள் வருமானம் மேல் கூறியதை காட்டிலும் இரட்டிப்பாகக் கிடைக்கும்,

**குறிப்பு**

நன்கு முற்றிய சந்தன மரங்களின் பட்டைகள் வெடித்துப் பிசின் போன்ற திர வம் வழிய ஆரம்பித்தால் அதிலிருந்து வரும் வாசனை ஓரிரு கிலோ மீட்டர் தூ ரம் வரை இருக்கும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.

அதோடு மக்கள் மத்தியில் சந்தன மர நடுகை சம்பந்தமான தவறான புரிதல் ஒன்றும் உள்ளது. அதாவது சந்தன மரங் கள் நடுகை செய்யப்பட்ட இடங்களில் பாம்பு களின் நடமாட்டம் அதிகம் உள்ளது என்ப தாகும்.

இது முற்றிலும் தவறான புரிதலாகும் அதாவது சந்தன மரத்தில் இருந்து வரும் வாசத்தால் கவரப்பட்டுப் பறவைகள், ஏனைய உயிரினங்கள் அவ்விடத்திற்கு வருவது இயல்பான ஒன்று.

மாறாகப் பாம்புகள் தான் அவ்விடத்திற்கு வரும் என்பது முற்றிலும் பொய்யான கருத் தாகும்.

எமது முன்னோர்களில் வசதி படைத்த வர்கள் சந்தன மரங்களின் சிறப்பினை அறிந்து கொண்டு தாங்கள் மட்டுமே இதிலிருந்து வருமானத்தை ஈட்ட வேண் டும் அதோடு இவற்றை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவும்.

சாமானியர்கள் இது பற்றி அறிந்திருக் கக் கூடாது, வளர்க்கக்கூடாது என்பதற்கா கச் சொல்லப்பட்டகட்டுக் கதைகள் ஆகும்.

சந்தனக் கன்றுகள் நடவிரும்பும் பண் ணையாளர்கள் இதற்குரிய பிரத்தியேக அனுமதியோடு உற்பத்தி செய்கின்ற பண் ணைகளிலோ அல்லது ஏதேனும் நிறுவ னத்தின் ஊடாக மட்டுமே கொள்வனவு செய்ய வேண்டும்.

மாறாக அனுமதிப்பத்திரம் இல்லாமல் சந்தன கன்றுகள் உற்பத்தி செய்து விற் பனை செய்கின்ற எந்தப் பண்ணைகளி லும் கொள்வனவு செய்ய வேண்டாம்.

காரணம்: இதற்குரிய அனுமதிப் பத்திரம் இல்லாமல் கொள்வனவு செய்து நடப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் நீங்கள் அறுவடை செய்ய முற்படும்போது

அரசால். முற்றாகச் சந்தன மரங்களை வெட்டுவதற்குரிய அனுமதி மறுக்கப்படும்.

வெட்டுவதற்குரிய அனுமதி மாத்திரம் அல்ல விற்பனை செய்வதற்குரியஅனுமதி யும் முற்றாக மறுக்கப்படும் என்பதையும் நினைவில் வையுங்கள்.

**ஆனந்தன் பிரேம்நாத்**
**லக்சிபண்ணை**



# ஆனையிறவு உப்பளம் ஒரு பார்வை

**- செங்கதிர் -**




புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழத்தில் முதலீடுகளை செய்யும்போது இவை பற்றியும் சிந்தனை செய்யலாம்.

தமிழர் தாயகத்தின் ஒரு முக்கிய வளம் எப்படித் தமிழர் கரங்களைவிட்டுச் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு 'ஆனையிறவு உப்பளம்' மற்றொரு உதாரணம்.

ஒரு காலத்தில் இலங்கை முழுவதற்குமானஉப்புத்தேவையைப் பூர்த்தி செய்து வந்த ஓர் உப்பளம், பல்வேறு இரசாயனப் பொருட்களும், இரசாயன மூலப்பொருட்களும்உருவாகக் காரணமாக இருந்த அந்த உப்பளம், இன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கானசெயற்பாட்டுடன்முடங்கிக் கிடக்கின்றதைப்பார்க்கின்றபோது ஒவ்வொரு தமிழ் மகனினதும் மனங்கள் வலிக்கத்தான் செய்யும்.

காரணம் என்ன தெரியுமா?

முதலாவது காரணம் அனைவரும் அறிந்த ஒரு காரணம் தான்.

மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அரசாங்கம் இந்த உப்பளத்தை அணுகுவது.

இரண்டாவது, உப்பளத்தில் பணியாற்ற இளைஞர்கள் முன்வராத காரணம்.

பெரும்போக உப்பு அறுவடையாகிறது

ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறுவடை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இப்போது உப்பு பெரும்போககாலமாகும். கடந்த சில தினங்களாக மழையினால் தாமதமான உப்பு அறுவடை துரிதமாக நடைபெறுவதாகவும், ஆனையிறவில் உற்பத்தியாகும்உப்புக்கள் உள்ளூர் தேவைகளுக்குப் பயன்படுவதாக உப்பள முகாமையாளர் தெரிவித்தார்.

"என்ன வளம் இல்லை எங்கள் நாட்டில். ஏன் கையை ஏந்த வேண்டும் வெளி நாட்டில்?" கேள்வி கேட்டுவிடத் தோன்றுகிறது.

பெருவளங்களில்ஒன்றாகிய கடல் வளத்தைக் கொண்டு உப்பும் அது சார்ந்த உற்பத்திகளும்பயன்பாடும் பெரும் வரமே! வீதியோரத்திலும் உப்பு பிஞ்சாகிறது.

ஆனையிறவு A9 வீதியின் 265 KM கல்லடியில் வீதிக்கும் தொடருந்து பாதைக்கும் இடையில் தேங்கிய கடல் நீர் கடும் வெப்பத்தினால்உப்பாகிக் கொண்டிருக்கிறது.

'பிஞ்சுப்பூ' என்ற பதநிலையில் உப்பு பூத்துக் கொண்டிருக்கின்றது. சில தினங்களில் விளைந்து பாறையாகிவிடும்.

ஆனையிறவு உப்பளத்தில் விளைந்த உப்புக்களை வெட்டி உப்புமனை இடும் இவ்வேளையில் வீதியோரத்தில் தேங்கிய கடல் நீர் உப்பாகி வருகிறது.

ஒரு சில சென்டிமீட்டர் உயரம் வரை உப்புப் பாளங்கள் தோன்றுவதை அவதானிக்கலாம்.

இந்த உப்புக்கான கடல்நீர் உப்பளத்தின் ஈற்றுப் பாத்தி நிரம்பியபோது வழிந்து வெளியேறிய நீரால்பூத்து காய்க்கிறது.

எனினும் இந்தச் சிறுதேக்க உப்புப்பாளங்கள் உணவுப் பயன்பாட்டுக்குப் பொருத்தமானதாக இருக்காது.

உப்பு உடைக்கும் தொழிற்சாலை வசதியில்லை கிளாலி கடல் நீரேரியில் இருந்து நீரைப் பெற்று நிகழும் ஆனையிறவு உப்பள உப்பு உற்பத்தியின் செயன்முறையினை அங்கு பணியாற்றும் தொழில் மேற்பார்வையாளர் இடம் கேட்டபோது புரிந்து கொள்ளுமளவில் விளக்கினார்.

'இப்போது சோடியம் குளோரைட் மட்டுமே உற்பத்தியாவதாகவும் அதுவும் புத்தளம் உப்புத் தொழிற்சாலைக்கே சுத்திகரிப்பதற்காகவும் உடைத்து பொதியிடுவதற்காகவும் கொண்டு செல்லப்படுகின்றது.

ஆனையிறவில் விளையும் உப்பே இலங்கையில் தரமான நல்ல உப்பு ஆகும்.

ஆயினும் அதனை உடைத்துப் பொதியிடும் தொழிற்சாலை வசதி ஆனையிறவில் இல்லை எனவும் கூறியிருந்தார். எதிர்காலத்தில் இத் தொழிற்சாலை வசதி ஆனையிறவிற்குக் கிடைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது.

### வேலையாட்கள் பற்றாக்குறை

ஆனையிறவுஉப்பளத்தில்நூற்றைம்பது ஊழியர்கள் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சிலர் ஆறு வருடங்களுக்குமேலாகவும் பணியில் உள்ளனர்.

சிலர் சில நாட்கள் வேலையின் பின் பணிவிலகி விடுகின்றனர் எனவும் இருநூறு பணியாளர்கள் தேவையென மற்றொரு வேலை மேற்பார்வை அதிகாரி கூறினார்.

உப்பளம் மேலும் அபிவிருத்தியடைந்து பாத்திகள் அதிகரிப்பதால் வேலையாட்கள் இன்னும் அதிகமாக இனிவரும் காலங்களில் தேவைப்படுவார்கள் என்றார்.

பணியில் உள்ள ஊழியர்கள் அறுவடை காலங்களில் உப்பு அறுவடையில் ஈடுபடுவதும் ஏனைய காலங்களில் உப்பு ஏற்றும் பணியிலும் ஈடுபடுகின்றனர். பாலின வேறுபாடின்றி ஊழியர்கள் உப்பளத்தில்



பணியாற்றுவதைக் காணலாம்.

### உப்பு உற்பத்திச் செயன்முறை

உப்பளங்களில் பாத்திப்படி முறைகளினூடாக கடல்நீரில் உள்ள மனித உணவுத் தேவைக்குப் பொருத்தமில்லாத உப்புக்கள் கழிவாகவடிக்கப்பட்டுகின்றன.

இத்தகைய வடிகட்டல்களின் மூலம் கல்சியம்சல்பேற்று ($CaSO_4$)இ கல்சியம் காபனேற்று ($CaCO_3$) போன்ற உப்புக்கள் பாத்திகளில் வீழ்படிவாகி பளிங்கு போன்ற பாறைகளாகின்றன.

இறுதியாக உள்ள உப்புப் பத்தியில் மனித உணவுத் தேவைக்கு பெரிதும் பயன்படும் சோடியம் குளோரைட்டு ($NaSO_4$) வீழ்படிவாகிறது.

இப்போது இலங்கையில் கடும் வறட்சி நிலவிவருகின்ற வேளையில் ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறுவடை நிகழ்கின்றது.

அறுவடையினால் கிடைக்கும் உப்புக்கள் மனையிடப்பட்டுக் காடுகளில் வேயப்படும். ஆறுமாதங்களாகமனையிடலில் பேணப்பட்டும். இதனால் வெட்டப்பட்ட சோடியம் குளோரைட்டுடன் கலந்திருந்த மக்னீசியம் குளோரைட்டு ($MgCl^2$), மக்னீசியம் சல்பேற்று($MgSO^4$) போன்ற மக்னீசியம் சேர்வைகள் வழியில் உள்ள நீராவியை உறிஞ்சி நீர்க்கசிவுக்குள்ளாகி உப்பு மனையின் அடிப்பகுதிக்கு வீழ்படிவாகிச் சேரும்.

குறைந்தளவு மாசுள்ளசோடியம் குளோரைட்டு (கறி உப்புபாகிய சோடியம் குளோரைட்டு சிறிதளவில் மக்னீசியம் குளோரைட்டு போன்ற மக்னீசியம் சேர்வைகளை உள்ளடக்கியிருக்கும்.

இதனாலேயேவளியில் திறந்து வைக்கும் போது மேசை உப்பெனவும் அழைக்கப்படும் சோடியம் குளோரைட்டு நீர்க்கரைசலுக்குள்ளாகிறது.

மனிதப் பயன்பாட்டுக்கேற்ற வகையில் மாற்றப்பட்டு விற்பனைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூடப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இலங்கையின் ஆனையிறவு உப்பை மூலப்பொருளாக கொண்டு தொழிற்பட்ட தொழிற்சாலைதான் .



எனினும் இது இப்போது தொழிற்படுவதில்லை. இந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் சோடியம் ஐதரொட்சைட்டு (NaOH), ஐதரோக்குளோரிக் கமிலம்(HCl) போன்ற இரசாயனப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

இந்த இரசாயனத் தொழிற்சாலை இல்லாததால் இப்போது கல்சியம்சல்பேற்று போன்ற உப்புக்கள் உற்பத்தி செய்வதில்லை என உப்பள அதிகாரிகளிடம் கேட்டபோதுதெரிவித்தனர்.

இதனால்தொலமைற்று, அப்பற்றைற்று, ஜிப்சம் போன்ற இரசானப் பொருட்கள் உற்பத்தி இல்லாது போகின்றது.

தமிழர் தாயகப் பகுதியில் உள்ள மூடப்பட்ட பல தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்று.

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையும் காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலையும் இவ்வாறு இப்போது தொழிற்பாடற்றுக்கிடக்கின்றன.


சூழல் நேயத்தன்மையோடு இத்தகைய தொழிற்சாலைகள்மீளவும் இயங்கும் போது இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம் மேம்படுவதோடு உள்ளூர்த் தேவைக்கான இறக்குமதியும் குறையும்.

இழக்கப்படும் அந்நியச் செலாவணியை பெருக்கி வளரும் வளர்ந்த பொருளாதார நாடாக இலங்கை மாறிட உதவும்.

உள்ளூர்மக்களுக்கான வேலையில்லா நிலைமைகளும் மாற்றியமைக்கப்படும்

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழத்தில் முதலீடுகளைச் செய்யும்போது இவை பற்றியும் சிந்தனை செய்யலாம்.

# இத்தாலிய எருமைகளிலிருந்து தயாரிக்கப்படும் Mozzarella cheese



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

**எருமை வளர்ப்பு 02**



உலகெங்கிலும் தயாரிக்கப்படும் பீட்சா உணவுகளில் பாவிக்கப்படும் முதன்மையான cheese வகை Mozzarella cheese ஆகும். பலவகை cheese பயன்பட்டாலும் Mozzarella வகை பயன்படுத்தும்போது அதன் சுவையும் தரமும் சிறப்பானது. விலையும் அதிகம். இந்த வகை cheese இற்கு இத்தாலி மிகப் பிரசித்தம்.ஏனைய நாடுகளின் Mozzarella வகையை விட இத்தாலியில் தயாரிக்கப்படுவது சுவை மிக்கது.தரம் வாய்ந்தது. இத்தாலியிலுள்ள




Medditarenian எருமைகளில் இருந்தே இந்த வகை cheese தயாரிக்கப்படுகிறது.

இத்தாலியில் 400,000 வரையிலான எருமைகள் உள்ளன. உரோமப் பேரரசு காலத்தில் சில ஆக்கிரமிப்புகளின் போது (Barberian invasion) இந்த எருமைகள் கொண்டு வரப்பட்டனவாம். ஆரம்ப காலங்களில் வண்டி இழுத்தலுக்கும் பொதி சுமத்தலுக்கும் இறைச்சிக்கும் பயன்பட்ட மேற்படி எருமைகள் கடந்த நூற்றாண்டில் Mozzarela cheese தயாரிக்கப் பயன்படுகின்றன.

இந்த இத்தாலிய Medditarenian வகை எருமைகளும் கரிய நிறமுடையன. ஆண் எருமை 500-600 Kg வரையும் பெண் எருமைகள் 300-450Kg வரையும் சராசரி நிறையை உடையன. 1600-1800 Kg வரையான வருடாந்த பாலுற்பத்தியைத் தர வல்லன. பாலில் உள்ள 7-8% வரையான கொழுப்பு மேற்படி cheese செய்யக் காரணமாக அமைகிறது. சிறியது முதல் பெரியது வரையான பல cheese உற்பத்திக் கூடங்களில் Mozzerela தயாரிக்கப்பட்டு உலகெங்கிலும் ஏற்றுமதியாகிறது.

வவுனியா, செட்டிகுளத்தில் பால் பொருள் உற்பத்தி செய்யும் புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் பரீட்சார்த்தமாக Mozzerella cheese தயாரித்திருந்தார். பொருளாதார நெருக்கடியும் எருமைப்பால் கிடைப்பதில் இருந்த சிரமமும் அவரின் முயற்சிக்குத் தற்காலிகமாக தடை போட்டுள்ளது.

பொதுவாக எருமைப்பாலில் பசுப்பாலை விடச் சில முக்கிய மூலக்கூறுகள் அதிகளவில் உள்ளமை. தயிர், வெண்ணை, சீஸ், பன்னீர் போன்ற பால் உற்பத்திப் பொருட்களை செய்யக் காரணமாக அமைகின்



றன. குறிப்பாகக் கொழுப்பு (பசுப்பால் - 3-4%,எருமைப்பால் - 6-8%), புரதம் (பசுப் பால்- 3.2%, எருமைப் பால் 3.7%) போன்றவை அதிகம் உள்ளமையும் சில நொதியங்களின் சாதகமான செயற்பாடுகளும் கட்டமைப்பின் சாதகத் தன்மையும் மேற்படி

**இத்தாலியில் 400,000 வரையிலான எருமைகள் உள்ளன. உரோமப் பேரரசு காலத்தில் சில ஆக்கிரமிப்புகளின்போது (Barberian invasion) இந்த எருமைகள் கொண்டு வரப் பட்டனவாம். ஆரம்ப காலங்களில் வண்டி இழுத்தலுக்கும் பொதி சுமத்தலுக்கும் இறைச்சிக்கும் பயன்பட்ட மேற்படி எருமைகள் கடந்த நூற்றாண்டில் Mozzarela cheese தயாரிக்கப் பயன்படுகின்றன.**




தரமான பால் பொருட்களின் உற்பத்திக்குக் காரணமாக அமைகின்றன.

இந்தியாவில் எருமைப்பாலில் இருந்து பல்வேறு பட்ட பால்ப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. Amul நிறுவனத்தை நடத்தும்போது Dr.வர்க்கீஸ் குரியன் அவர்கள் எருமைப்பாலிலிருந்து பால் மா தயாரிக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டறிந்திருந்தார். அன்றைய காலத்தில் மேலைநாடுகளின் தொழில்நுட்பம் பசுப் பாலில் இருந்துதான் பால்மா தயாரிக்க உதவியிருந்தது. குரியனின் குழுவினரின் இந்தக் கண்டுபிடிப்பு இந்தியாவின் பால் புரட்சியின் ஒரு முக்கிய மைல் கல்.அன்றைய நாளில் இந்தியாவில் பசுக்களை விட எருமைகளே அதிக பாலைத் தந்திருந்தன.

இலங்கையின் கிழக்கு, தென், வடமேல் மாகாணங்களில் எருமைகளிலிருந்து கிடைக்கும் தயிர் மிகப் பிரபலம்.சுவை கூடியதும் கூட. எதிர்வரும் வாரங்களில் எருமைகள் தொடர்பாக மேலும் ஆராய்வோம்.



கப்பட்டால்' பங்கெடுப்பேன் எனப் பிரெஞ்சு அதிபர்எம்மானுவல் மக்ரோன் கூறியிருந்தாலும், பிரான்ஸ்உள்பட மேற்கத்திய நாடுகள் எவையும் அழைக்கப்படவில்லை.

ஆனால், ஆபிரிக்க ஒன்றியத்தின் 55 உறுப்பினர்கள் ஆசியா, தென் அமெரிக்கா, சிறு தீவு நாடுகள் என தெற்குலக நாடுகளின் (global south) தலைவர்களுக்குத் தென் ஆபிரிக்கா அழைப்புவிடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. தீவிரவாதம், பலதரப்புச் சீர்திருத்தங்கள், டிஜிட்டல் பொருளாதாரம், வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு ஆகியவை குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**முக்கிய நகர்வுகள்**

ஆறு புதிய உறுப்பினர்களுடன் பிரிக்ஸ் கூட்டமைப்பு விரிவடைய இருப்பது ஒரு முக்கியமான நிகழ்வாகும். 40க்கும் மேற்பட்ட நாடுகள்பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேருவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், குறைந்தது 19 நாடுகள் உறுப்பினராவதற்கு முறையாக விண்ணப்பித்திருந்தன.

இந்நிலையில், அர்ஜென்டினா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் உறுப்பினராகச் சேருவதற்குத் தற்போது அழைக்கப்பட்டிருக்கின்றன. 2024 ஜனவரி 1 அன்று புதிய நாடுகள் அதிகாரபூர்வமாக இணையவிருக்கின்றன.

மேற்குலகத்தை எதிர்கொள்ளும் நோக்கில், புதிதாகப் பல நாடுகளை பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைக்கும் முன்னெடுப்பை ரஷ்யாவும் சீனாவும் தீவிரமாக முன்னெடுத்திருப்பதாக அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர். இந்தியா இதை வரவேற்றது. ஆனால், புதியவர்களின் இணைப்புக்கான விதிமுறைகளும் செயல்முறைகளும் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தது.

பிரிக்ஸ் கூட்டமைப்பைச் சீனாவின் கனவுகளுக்குக் கருவியாக்க வழிசெய்யும் நாடுகள் உள்ளே நுழைவதை இந்தியா வெற்றிகரமாகத் தடுத்திருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். மறுபுறம், புதிய உறுப்பினர்களுடன் இந்தியாவின் உறவு சீராக இருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்திய-சீன எல்லைப் பிரச்சினை காரணமாக இரு நாட்டு உறவுகளில் தேக்கம் நிலவிவரும் நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சீன அதிபர் ஷி ஜின்பிங்-இன் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்தது.

முன்னதாக, ஜூன் 2 அன்று கேப்டவுனில் நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டத்தில், பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான சர்வதேச வர்த்தகம், நிதி சார்ந்த பரிமாற்றங்கள் ஆகியவற்றில் உள்ளூர் பணத்தைப் பயன்படுத்த வழிசெய்யும் 'தி கேப் ஆஃப் குட் ஹோப்' என்கிற பிரகடனம் வெளியிடப்பட்டது. பிரிக்ஸ் ஆண்டுக் கூட்டத்தைத் தொடர்ந்து, ஜி - 20 கூட்டமைப்பின் உச்சி மாநாடு, செப்டம்பர் 9, 10 தேதிகளில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெறவிருக்கிறது.





# 100 மாக்ஸ்

வேதநாயகம் தபேந்திரன்



**‘விழாக்கள் பல சலித்துப் போவதற்கும் தோல்வி அடைவதற்கும் காரணம் விழாத் தலைவர் தனது புகழ்பாடப் பெரும் விருந்தினர் கூட்டத்தை வரவழைப்பது தான். பொதுமக்களது நலனுக்காக வந்த பணம் என்பதை நினைவில் கொண்டு குழுவாக உழைத்தால் 100 மாக்ஸ் எடுப்பது சாதாரண ஒரு விடயம் தான்’**

2016,2019 ஆம் ஆண்டுகளில் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் இரு மாகாண விழாக்களைக் கிளிநொச்சி மாவட்டச் சமூக சேவைகள் உத்தியோகத்தர் என்ற பதவிப் பொறுப்பின் அடிப்படையில் தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பு எனதும் எனது அணி உத்தியோகத்தர்களினதுமாகக் கிடைத்தது.

இரண்டு விழாக்களும் விழா நாளில் பிற்பகல் 2 மணிக்கு நிறைவு அடையும் போது வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் வந்தோர் 100 மாக்ஸ் எனக் கூறிப் பாராட்டினார்கள்.

95 மாக்ஸ் அல்ல 100 மாக்சின் இரகசியம் என்ன எனச் சில நண்பர்கள் கேட்டார்கள். இரகசியம் இது தான்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தான் இம்முறை மாகாண விழா நடைபெறும் என்ற உத்தியோகபூர்வ அறிவித்தல் கடிதம் எமக்கு 03 மாதத்திற்கு முன்பாகவே கிடைக்கும். கடிதம் கிடைத்தவுடன் எமது உத்தியோகத்தர்களது மாதாந்தக் கூட்டத்தில் இந்த விழாவை நாம் எப்படி நடத்த வேண்டும்.

எமது திணைக்கள விழா வேறு மாவட்டத்தில் நடைபெற்றபோது கற்றுக் கொண்ட நல்ல விடயங்கள் எவை? பாதகமான விடயங்கள் எவை ? எமது மாவட்டத்தில் கடந்த காலத்தில் நாம் நடத்திய விழாக்களின் அனுபவங்கள் எப்படி?

போன்ற விடயங்களைக் கலந்துரையாடினோம். நிறைவான வெற்றிகரமான விழா ஒன்றை நடத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்ற தீர்மானங்களை எடுத்தோம். எண்ணி ஆக எட்டே எட்டு உத்தியோகத்தர்கள் தான் எமது திணைக்கள உத்தியோகத்தர்கள்.

இச் சிறிய படையணியை வைத்துக் கொண்டு பென்னாம் பெரிய ஒரு பாய்ச்சலைச் செய்ய வேண்டும்.

அதனால் விழா வேலைகளை ஒவ்வொருவராகப் பகிர்ந்து ஏழு பேருக்கும் கொடுத்தேன். ஏழு பேரும் சரியாகச் செய்கின்றார்களா? போதாமை வரும்போது எனது பங்களிப்பு எவ்விதம் அமையுமென மேற்பார்வையும் பங்களிப்பும் செய்வது எனது பொறுப்பு.

அடுத்த எமது மாதாந்தக் கூட்டத்துடன் இணைந்ததாகக் கிளிநொச்சியில் குறித்த துறைசார்பாக வேலை செய்யும் அரசசார்பற்ற நிறுவனங்கள்,பொதுஅமைப்புகளைப் பங்கேற்குமாறு அழைத்தேன். கூட்ட உபசரணைக்கு நலன்விரும்பி ஒருவரைக் கொண்டு ஒழுங்கு செய்தேன்.

கூட்டத்திற்கு வந்திருந்த அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் எமது தீர்மானங்களைக் கூறி அதில் திருத்தங்கள் உண்டாயின் கூறுங்கள் என அவர்களது கருத்துகளையும் உள்வாங்கினோம். எமது தீர்மானங்களை நிறைவு செய்து ஏற்கனவே பிரிக்கப்பட்ட ஏழு அணியினருடன் அவர்களது விருப்பத்திற்கேற்ப அவர்களை இணைத்துக் கொண்டோம்.

வேலைப் பகிர்வு அணி விபரம்,அவர்களது கைத்தொலைபேசி இலக்கம் என்பவற்றை தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்து ஒவ்வொரு அணியினரிடமும் கொடுத்தோம்.

விழா நாளுக்கு முதல் நாள் காலை முதல் மாலை வரையில் ஒழுங்கமைப்பைச் செய்தோம். சரி பிழை பார்த்தோம்.

எமது திணைக்களப் பணிப்பாளரும் ஏனைய உத்தியோகத்தர்களும் எமக்குச் சிறந்த ஒருங்கிணைப்பைத் தந்தனர்.

விழா அன்று ஏனைய 04 மாவட்ட உத்தியோகத்தர்களும் தம்தம் கடமைப் பொறுப்பைச் சரியாகச் செய்து பொதுமக்களை அழைத்து வந்திருந்தார்கள்.


எந்த ஒரு விழாவிலும் முகம் மலர்ந்த வரவேற்பு,உரிய நேரத்திற்கு உரிய இடத்திற்குக் கிடைக்கும் தரமான சுவையான சிற்றுண்டி, மதிய உணவு என்பவையே பங்கேற்பாளர்களைக் கவரும். அவர்களுக்கு மன நிறைவைத் தரும். அதில் மிகவும் கவனம் செலுத்தினேன்.

விழா உரிய நேரத்திற்குத் தொடங்கி சபை இரசிக்கக் கூடிய கலை நிகழ்வுகளுடன் நிறைவு பெற்றது.

இதனால் 100 மாக்ஸ் என்ற பாராட்டைப் பெற முடிந்தது.

எமது கிளிநொச்சி சமூக சேவை விழாக்களில் விருந்தினராக இருவரை மட்டுமே அழைப்போம். எனது தலைமை உரையை 10 நிமிடங்களுக்குள் நிறைவு செய்வேன். விருந்தினர் உரை முடிய மேடையைக் கலை நிகழ்ச்சிகளுக்காக முழுமையாகத் திறந்து விடுவோம். காசு கொடுத்துப் பார்க்க வேண்டிய விழா எனக் கூறுமளவுக்குச் சிறப்பான கலைநிகழ்வுகள் நடைபெறும்.

விழாக்கள் பல சலித்துப் போவதற்கும் தோல்வி அடைவதற்கும் காரணம் விழாத் தலைவர் தனது புகழ்பாடப் பெரும் விருந்தினர் கூட்டத்தை வரவழைப்பது தான். பொதுமக்களது நலனுக்காக வந்த பணம் என்பதை நினைவில் கொண்டு குழுவாக உழைத்தால் 100 மாக்ஸ் எடுப்பது சாதாரண ஒரு விடயம் தான்.




(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

∗ புதிய சுற்றுலா மார்க்கங்களினை உருவாக்குதல்: "சந்திரயான்-3" வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது இலங்கையில் சுற்றுலாவை மேம்படுத்தும். தற்போது இலங்கையில் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள வணிகங்கள் இதன் மூலம் விண்வெளி ஆய்வில் ஆர்வமுள்ள பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் இலங்கை வணிகங்கள் புதிய தொகுப்புகளை உருவாக்கத் தொடங்க வேண்டும்.

∗ வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டு: "சந்திரயான்-3" வெற்றிகரமாக முடிவடைந்ததன் மூலம் இலங்கை வணிகங்களுக்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் இடையில் புதிய கூட்டுக்கு வழிவகுக்கும். இலங்கை வணிகங்கள் இதில் ஆர்வமாகச் செயற்பட்டுத் தமது நெட்வொர்க்கிங் தொடங்குவதற்கான சிறந்த நேரமாக அமைத்துக்கொள்ளமுடியும்.

"சந்திரயான்-3" வெற்றிகரமாக முடிவடைந்தமை இலங்கைக்கு ஒரு முக்கிய மைல்கல்லாக இருப்பதோடு நாட்டின் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கை வர்த்தகர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வளர்ச்சியடைய வேண்டும்.

## இலங்கை செய்யக்கூடிய கொள்கை மாற்றங்கள்

சந்திரயான்-3 இன் வெற்றியை ஆதரிக்க இலங்கை செய்யக்கூடிய சில கொள்கை மாற்றங்கள்:

∗ விண்வெளி தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல்:

◆ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான நிதியை வழங்குவதன் மூலம் இலங்கை விண்வெளித் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்யலாம்.

◆ அத்துடன் இந்தப் பகுதியில் கல்வி மற்றும் பயிற்சிகளை ஆரம்பித்து ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் விண்வெளி ஆய்வுக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்க உதவும்.

சாதகமான வணிகச் சூழலை உருவாக்குதல்:

◆ வரிச் சலுகைகள், மானியங்கள் மற்றும் பிற சலுகைகளை வழங்குவதன் மூலம் விண்வெளி வணிகங்களுக்குச் சாதகமான வணிகச் சூழலை இலங்கை உருவாக்க முடியும்.

◆ இது விண்வெளித் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதற்கும் இந்தத் துறையில் வேலைகளை உருவாக்குவதற்கும் வணிகங்களை ஊக்குவிக்கும்.

∗ சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல்:

◆ கூட்டுப் பணிகள் மற்றும் திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் விண்வெளி ஆய்வில் சர்வதேச ஒத்துழைப்பை இலங்கை ஊக்குவிக்க முடியும்.

◆ இது அறிவு மற்றும் வளங்களைப் பகிர்ந்து கொள்ள உதவுவதுடன், விண்வெளி ஆய்வில் இலங்கை பங்கேற்பதை எட்டக்கூடிய நிதி திட்டமிடலில் மாற்றி அமைக்கும்.

∗ பொது விழிப்புணர்வை ஊக்குவித்தல்:

◆ கல்வித் திட்டங்கள் மற்றும்


Chandrayaan-3 is expected to enter Moon-orbit successfully.

பொது நிகழ்வுகளுக்கு நிதியளிப்பதன் மூலம் விண்வெளி ஆய்வு பற்றிய பொது விழிப்புணர்வை இலங்கை ஊக்குவிக்க முடியும்.

◆ இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இளைஞர்களை ஊக்குவிக்கவும், விண்வெளி ஆய்வுக்குத் தேசிய முன்னுரிமையாகவும் உதவும்.

∗ விண்வெளி நிறுவனம் ஒன்றை நிறுவுதல்:

◆ இலங்கையிடம் தற்போது விண்வெளி நிறுவனம் இல்லை.

◆ ஒரு விண்வெளி நிறுவனத்தை இலங்கையில் நிறுவுவது விண்வெளி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் நிர்வகிக்கவும் உதவும்.

◆ மேலும் இது விண்வெளி ஆய்வுக்கான நாட்டின் அர்ப்பணிப்பின் சமிக்ஞையாக இருக்கும்.

∗ விண்வெளித் திட்டத்தை உருவாக்குதல்:

◆ தெளிவான இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயித்து, அவற்றை அடைவதற்கான திட்டத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கை விண்வெளித் திட்டத்தை உருவாக்க முடியும்.

◆ இது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்வதுடன், விண்கலத்தை உருவாக்கி ஏவுவதையும் உள்ளடக்கும்.

∗ விண்வெளி விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களைப் பயிற்றுவித்தல்:

◆ இலங்கை விண்வெளி ஆய்வில் வெற்றிபெற வேண்டுமானால் விண்வெளி விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

◆ விண்வெளிக் கல்வித் திட்டங்களை நிறுவி, விண்வெளி அறிவியல் மற்றும் பொறியியல் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதன் மூலம் இதைச் செய்யலாம்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை விண்வெளி ஆய்வில் ஒரு முக்கிய பங்காற்ற முடியும் மற்றும் அதன் மூலம் வரும் பல நன்மைகளைப் பெற முடியும்.

மொத்தத்தில் சந்திரயான்-3 வெற்றிகரமாக முடிவடைந்தமை இலங்கையின் பொருளாதாரத்திற்கும் பெரும் வரப்பிரசாதமாக அமையும். இந்தப் பணியை ஆதரிக்கவும், அது கொண்டு வரும் பல நன்மைகளை அறுவடை செய்யவும் அரசாங்கம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

**+94-777-802-900**
**Email: swaminathan@agsarma.com**



எங்கடை ஆச்சி ஆம்பிளையோ பொம் பிளையோ சமைக்கத் தெரிய வேணும் எண்டுவா . சமை எண்டால் பக்குவப்படல் எண்டு அகராதி சொல்லுது. அதாலதான் நாங்கள் சாமத்தியப்பட்ட பிள்ளையளை பக்குவப்பட்டிட்டினம் எண்டிறனாங்கள். அப்ப சமையல் எண்டாலும் பக்குவப்ப டுத்தல் எண்டு அர்த்தம் எடுக்கலாம். என்னத்தை பக்குவப்படுத்திறது எண்டால் சாப்பாட்டின்ரை சுவை மணம் நிறம் சத் துக்களைப் பக்குவப்படுத்திறது எண்டு பொருள். யூ டியுப்பை இல்லாட்டில் டீவீயைப் பாத்துச் சமைச்சா உந்த மூண்டும் பக்கு வப்படாது எண்டது கனபேருக்கு விளங் கிறேல்லை. எப்பிடி எண்டான்ன அவிச்சுக் கொட்டினாச் சரி எண்டு நினைப்பினம். உதாலதான் உங்கை எத்தனையோ வீடு வேணும் எண்டுவா ஆச்சி. உப்பிடி வீண் விசும்பு விட்டு வளத்ததுகள்தான் போற போற இடங்களில குடும்பம் நடத்தத் தெரி யாம குழம்பித் தெருவில நிக்குதுகள் எண் டுவா.

சிலர் ரேக்அவேயில எடுத்துச் சாப்பிடலாம் இல்லாட்டில் ஹோட்டலிலை போய்ச்சாப் பிடலாம் என்னத்துக்குச் சமைச்சுக் கஸ் ரப்பட வேணும் என்னத்துக்கு சட்டி பெட்டி கழுவ வேணும் எண்டு நினைப்பினம். உப்பிடி நினைச்சு கடைவழியை அவன் தாற கண்டது கிண்டது பழசு பத்து எல் லாம் எடுத்துத் திண்டவை அதை ஒரு நாகரீகம் எண்டு நினைச்சவை பேந்து கண்ட கிண்ட வருத்தமும் வந்து பிறகு ஒண்டுமே தின்னேலாமல் உத்தரிக்கி றதை நாங்கள் எத்தனையோ இடங்களில ஆம்பிளையள் ஒரு மாதிரி சமைச்சுக் கிமைச்சு குடும்ப வண்டில மூச்சு முட்ட இழுத்து ஓடுறாங்கள்.

எங்கட ஒரு வெள்ளைக்காறக் கொம்ப னியில வேலை செய்யிற என்ரை சிநே கிதி ஒருத்தி ஆம்பிளையளும் பொம்பி ளையளும் சமமெல்லே. அப்ப சேர்ந் தெல்லோ சமைக்க வேணும். அதென்ன அடுப்பூதிறது பொம்பிளையளின்ரை வேலை எண்ட மாதிரிக் கன ஆம்பிளையள் நினைக்கினம் எண்டுவா. அவ சொல்லு றது உண்மை தான் அதனாலதான் ஆச்சி சொல்லுறவ ஆம்பிளையோ பொம்பி ளையோ சமைக்கத் தெரிய வேணும் எண்டு. உண்மையில ஆணும் பெண் ணும் சேர்ந்து சமைச்சா அலுப்பிருக்காது எண்டிறன்.

# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

களிலை சண்டை சச்சரவு வந்து அடி பட்டு ஏன் கனக்கப்போவான் நேற்று ஒரு இடத்தில கொலையிலை கூட முடிஞ்சி ருக்கு எண்டு ஒரு செய்தி பாத்தனான்.

சமையல் மனிசன்ரை கூர்ப்பில முக்கி யமான ஒரு விசயம் எண்டு ஆராய்ச்சி செய்தவை சொல்லுகினம். அப்ப ஒழுங் காச் சமைக்கத் தெரியாதவையை கூர்ப் படையாதவை எண்டாலாமோ எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது எனக்கு கேக்குது. உண்மையா ஒழுங்காச் சமைக் கத் தெரியேல்லை எண்டால் கூர்ப்ப டையேல்லை எண்டுதான் சொல்ல வேணும். நெருப்பைக் கண்டு பிடிக்கேக் கையே மனுசன் சமைக்கப்பழகிப்போட் டான் எண்டு அப்பு சொல்லுறவர். இப்ப என்னண்டால் நெருப்பில்லாமலே அவிக் காம பொரிக்காம சமைக்கிற முறையள் கனக்க வந்திட்டுது. உங்கை இப்பவும் கனபேர் ஐயோ என்ரை பிள்ளைக்கு சுடு தண்ணி கூட வைக்கத்தெரியாது எண்டு பெருமையாச் சொல்லுவினம். உப்பிடிப் பெருமை பேசுறவைக்கு பெரிய அவுறுகம் விடுவினம் நல்லாச் சுடுதண்ணியை கொதிக்க கொதிக்க மூஞ்சையில ஊத்த பாக்கிறம். ஆச்சி சொன்ன மாதிரி சமைக் கத் தெரிஞ்சா எங்களுக்கு விரும்பினதை விரும்பின நேரத்தில சமைச்சுத் தின்ன லாம். அதால செலவும் சிக்கனமாகும் உடம்பும் கண்ட கிண்ட வருத்தம் ஒண் டும் வராமல் இருக்கும். உங்கை சமைக் கத் தெரியாத ஆக்கள் லொக்டவுண் நேரத் தில எவ்வளவு கஸ்ரப்பட்டவை எண்டது எங்களுக்குத் தெரியுமெல்லே .

வெளிநாடு வழியை போன எங்கட பெடியள் கனபேர் சமைக்கத் தெரிஞ்சதால தப்பிப்பிழைச்சவங்கள். பிறகு வடிவு மட் டும் பாத்து சமைக்கத் தெரியாத பொம்பி ளையளைக் கூப்பிட்டு இப்பவும் சமைச் சுக் குடுத்து குடும்பம் நடத்திறாங்கள் எண்டு என்ரை கூட்டாளி ஒருத்தன் பகிடி யாச் சொல்லுறவன். உது மாதிரி கண்டபடி எக்கச்சக்கமாச் சீதனம் குடுத்துக் கட்டின கன பொம்பிளையள் என்ன என்ரை அப் பன் ஆத்தை இவ்வளவு சீதன பாதனத்தை தந்தது உங்களுக்குச் சமைச்சுப் போடவே எண்டு சண்டை போடுவினம். அப்பிடி யான இடங்களில சமைக்கத் தெரிஞ்ச

ஆனாலும் ஒரு விசயத்தை ஒத்துக் கொள்ள வேணும். அநேகமா எங்க எந்த இடத்திலையும் எந்தக்ஹோட்டலில பாத் தாலும் சமையல்காறர் ஆம்பிளையளாத் தான் இருப்பினம். அவை சமைச்சுக் குடுக் கிறதை பெண்டுகள் சாப்பிட்டுப் போட்டு ஆஹா ஓஹோ எண்டு போட்டுத் தங்கட வீட்டு ஆம்பிளையளைப் பாத்து நீங்களும் இருக்கிறியளே எண்டு கருத்துச் சொல் லுவினம். அதாலதான் நல்ல சமையலை நளபாகம் எண்டு ஆக்கள் சொல்லுவினம். நளனின்ரை சமையலிலை தமயந்தி மட் டும் இல்லை. நாடே கட்டுப்பட்டுக் கிடந்தது எண்டு ஆச்சி சொல்லுறவ. முந்தி நான் படிப்பிக்கிற காலத்தில பள்ளிக்கூட நிகழ் வுகளுக்குச் சமைக்கேக்கை ரீச்சர் மார் கறி கூட்ட என்னைத்தான் கூப்பிடுறவை.

கொஞ்சம் பொறுங்கோ... நேரம் எல்லே போகுது இன்னும் உலை வைக்காம உங்கை என்னத்தை எழுதிக்கிழிக்கிறி யள் எண்டு வீட்டம்மா கிழிக்கிறா . சமைச்சு முடிய பிறகு மிச்சத்தை எழுதிறன். சோறு முக்கியம் கண்டியளோ.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2023இல் வெளியிடப்பெற்றது.